Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



சாறிகள், பட்டு வேட்டிகள்,
கூறை சாறிகள் மற்றும்
ரெடிமேட் ஆடைகள், பல்வேறு
துணி வகைகள், பிளவுஸ்
துணி வகைகள் யாவற்றுக்கும்
வருகை தாருங்கள்
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(சி-2014)
T.P NO:
222 2063

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 24 (17.01.2004) சனிக்கிழமை இதழ்:108

# எட்டு மாதக் குழந்தை ஒன்று உட்பட மூவர் மர்மமாக வெட்டிக்கொலை!

## கனகம்புளியடிப் பகுதியில் பயங்கரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - சரசாலை - கனகம்புளியடிப்பகுதியில் வசித்துவந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் இனந்தெரியாதவர்களால் கடந்த 14ஆம் திகதி இரவு மர்மமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

வெட்டிக்கொல்லப்பட்டவர்களில் கணவன், மனைவி, உட்பட அவர்களின் எட்டு மாதக் குழந்தையும் அடங்கும்.

இலங்கநாதன் சுதாகரன் (வயத38),அவரது மனைவியான சுவர்ணவதி (வயது 29), இவர்களது மகனான சுதாகரன் வஷ்ணன் (எட்டு மாதம்) ஆகிய மூவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

புத்தூர் அண்ணமார் கோயிலடியைச் சேர்ந்த இவர்கள், கனகம்புளியடிப் பகுதியில் வாடகை வீட்டில் வசித்துவந்தனர் என்றும், படுக்கையில் வைத்தே இந்த மூவரும் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பி. தலைவர் நாடு திரும்புகிறார்!

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க எதிர்வரும் 20 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளதாகத் தெரியவருகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி உடன்பாடு திகதி கைச்சாதாகவுள்ள எதிர்வரும் 20 ஆம் திகதி மாலை சோமவன்ச அமரசிங்க கொழும்பு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.1989 ஆம் ஆண்டில் ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சி தோல்வியடைந்ததை அடுத்து அதன் தலைவராக இருந்த சோமவன்ச அமரசிங்க லண்டனில் தஞ்சமடைந்தார். கடந்த 15 ஆண்டுகளாக லண்டனில் வசித்துவரும் அவர் கடந்த 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது இலங்கை வந்திருந்தார்என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம்; தொடர்ந்து பேச்சு நடத்துவதற்கு முடிவு!

## முதற்கட்ட வரைவும் தயாரிப்பு

(புதுடெல்கி)

**இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு கூட்டுறவு உடன்படிக்கை செய்துகொள்வது தொடர்பான பேச்சுக்களை தொடர்ந்து நடத்துவது என்று நேற்று இருநாட்டு பாதுகாப்பு உயர்மட்டக் குழுக்களும் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது தீர்மானிக்கப்பட்டது.**

இரண்டு தரப்புக்களும் மூன்று நாட்கள் நடத்திய பேச்சுக்களின் முடிவில் இது குறித்து இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் -

இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பை மேலும் நெருக்கமடைய வைக்கும் உடன்படிக்கை தொடர்பான முதற்கட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

இரு நாட்டு அதிகாரிகளும் தொடர்ந்து பேச்சு நடத்தி இந்த உடன்படிக்கையில் இடம்பெறவேண்டிய அம்சங்களை இறுதி செய்வதெ

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 12 வருடங்கள் ஜனாதிபதியாக சந்திரிகா பதவி வகிக்கலாம்!

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை 12 வருடங்கள் பதவி வகிப்பதற்காகவே என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது -

1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதற்தடவையாக ஜனாதிபதி சந்திரிகா பதவிப்பிரமாணம் செய்ததுடன் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னரே ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது.

இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, நாட்டுநிலைமைகள் காரணமாக தேர்தல் முடிவுகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜப்பானிய தூதுவர் அகாஷி நாளை மறுநாள் வருகிறார்!

## ஒரு வாரம் இங்கு தங்கியிருப்பார்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பாக அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும் பேச்சுக்களை நடத்துவதற்காக ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி நாளைமறுநாள் கொழும்பு வரவுள்ளார்.

இது தொடர்பாக ஜப்பானியத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கொழும்பு வரும் ஜப்பானியத் தூதுவர் அகாஷி, கிளிநொச்சிக்கு விஜயம் செய்து சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் புலிகளுடன் பேச்சு நடத்துவார்.

இதையடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும், (12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுத் தலைவராக மீண்டும் ஹொவ்டே நியமனம்!

(ஒஸ்லோ)

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவராக ஜெனரல் புறூவ் ஹொவ்டே நோர்வே அரசினால் பெப்ரவரி முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய தலைவர் ட்ரைகேவ் ரெலவ் சனுக்குப் பதிலாகவே இவர் நியமிக்கப்பட்டுள்ளதாக நோர்வே வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நியமனம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த புறூவ் ஹொவ்டே - இந்த நியமனத்தைத் தான் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், அடுத்த மாதம் முதல் வாரத்தில் இலங்கை வரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய தலைவரான ட்ரைகேவ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உணர்வுபூர்வமாக நடைபெற்ற கிட்டு நினைவுநாள் நிகழ்வுகள்!

(வடமராட்சி)

கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் 11 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று வடமராட்சி தீருவில் மைதானத்தில் நடைபெற்றது.

வடமராட்சி பிரதேச கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 1996 ஆம் ஆண்டு படையினரால் அழிக்கப்பட்ட கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவுக்கல் புனரமைப்புச் செய்யப்பட்டு மீண்டும் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

முன்னதாக, நிகழ்வு இடம்பெற்ற தீருவில் மைதானத்துக்கு மாவீரர்களின் பெற்றோர் மருதடிச் சந்திப் பகுதியிலிருந்து பாண்ட வாத்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலையைத் திறக்கக்கோரி

# வலயக் கல்வி அலுவலகம் முன் மிருசுவில் பகுதி மக்கள் மறியல்!

(மீசாலை)

மிருசுவில் - தவசிக்குளம் ரோமன் கத்தோலிக்க பாடசாலையை மீளத் திறக்கக் கோரி, அப்பகுதி மக்கள் தென்மராட்சி வலய கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டு, கல்வித் திணைக்கள அதிகாரிகள் எவரையும் வெளியே வரவிடாது மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை பத்து மணியளவில் நடைபெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

சுமார் நூறு வருடங்கள் பழமைவாய்ந்த இந்தப் பாடசாலை 1999 ஆம் ஆண்டுடன் மூடப்பட்டு தற்காலிகமாக கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டு நடைபெற்றது. ஆனால், இந்தப் பாடசாலையை சொந்த இடத்தில் இயங்கவைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
(சி-2009) email :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி தேசியவாத காங்கிரஸ் கட்சி முடிவு

(புதுடெல்லி)

காங்கிரஸ் மூத்த தலைவர்களாக இருந்த சரத்பவார், சங்மா, தாரிக் அன்வர் ஆகிய 3 பேரும் சோனியா வெளிநாட்டு பெண், அவர் பாரத பிரதமராக அனுமதிக்கமாட்டோம் என்று எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து அவர்கள் மூவரையும் காங்கிரஸ் கட்சியில் இருந்து 5 ஆண்டுளுக்கு முன்பு சோனியா நீக்கினார். உடனே சரத்பவார் தலைமையில் தேசியவாத காங்கிரஸ் கட்சி உருவானது.

மராட்டியம், சத்தீஸ்கார் உட்பட சில மாநிலங்களில் தேசிய வாத காங்கிரஸ் கட்சி செல்வாக்குடன் உள்ளது. மராட்டியத்தில் கடந்த சட்டசபை தேர்தலின்போது கணிசமான தொகுதிகளை கைப்பற்றிய தேசியவாத காங்கிரஸ் கட்சி, காங்கிரசுடன் கூட்டணி அமைத்தது.

என்றாலும் சரத்பவாருடன், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேருக்கு நேர் சந்திக்கவில்லை. இரண்டே இரண்டு தடவைகள்தான் அவர்கள் தொலைபேசியில் இருந்தார்கள்.

இந்த நிலையில் பாரதீய ஜனதாவுக்கு எதிரான கட்சிகளை ஓரணியில் திரட்டி வரும் சோனியா, சரத்பவாருடன் தொலைபேசியில் பேசினார்.

அப்போது தன் வீட்டுக்கு வருமாறு சோனியாவை சரத்பவார் அழைத்தார். அந்த அழைப்பை ஏற்று சரத்பவார் வீட்டுக்கு சோனியா சென்றார்.

சுமார் ஒரு மணி நேரம் அவர்கள் பேசினார்கள். பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைந்தது என்று சோனியா - சரத்பவார் இருவரும் அறிவித்தனர்.

இதனால், காங்கிரஸ் - தேசியவாத காங்கிரஸ் இடையே கூட்டணி தற்போது உறுதி ஆகிவிட்டது.

அடுத்த கட்டமாக தொகுதி பங்கீடு பற்றி பேச தீர்மானித்துள்ளனர். மராட்டியத்தில், காங்கிரசும், தேசியவாத காங்கிரசும் ஒன்றை நம்பி மற்றொன்று இருப்பதால், கூட்டணி அமைப்பதை தவிர வேறு வழியில்லை என்ற நிர்ப்பந்தம் காரணமாக சேர்ந்துள்ளன.

மராட்டியத்தில் 11 தொகுதிகளில் காங்கிரசும், 7 தொகுதிகளில் தேசிய வாத காங்கிரசும் கடந்த நாடாளுமன்ற தொகுதியில் வென்றிருந்தன. இந்த தடவை இரு கட்சிகளும் தொகுதிகளை சரிசமமாகப் பிரித்து கொள்ளும் என்று தெரிகிறது.

கூட்டணி பேச்சுவார்த்தை முடிந்ததும், சோனியா நிருபர்களிடம் கூறுகையில், "பாரதீய ஜனதாவை தோற்கடிக்க நாங்கள் கை சேர்ந்துள்ளோம். எங்கள் தேர்தல் வியூகத்துக்கு வெற்றி கிடைக்கும்" என்றார்.

சரத்பவார் நிருபர்களிடம் கூறியதாவது:-

சோனியா காந்தி வெளிநாட்டு பெண் என்ற கோஷத்தை உருவாக்கியது நாங்கள் தான். அதை இப்போதைக்கு கைவிட தேசியவாத காங்கிரஸ் விரும்புகிறது.

இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் அந்த பிரச்சினையை எழுப்புவது சரியாக இருக்காது. தேசிய நலனைக் கருத்தில் கொண்டு நாங்கள் முடிவுக்கு வந்து இருக்கிறோம் - இவ்வாறு சரத்பவார் கூறினார்.

காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கூட்டணிக்கு தேசியவாத காங்கிரசின் மூத்த தலைவர் சங்மா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

சங்மா தொடர்ந்து எதிர்ப்பதால் தேசியவாத காங்கிரஸ் கட்சி பிளவுபடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சங்மா தலைமையில் உருவாகும் கட்சி பாரதீய ஜனதாவுடன் கூட்டணி அமைக்க வாய்ப்புள்ளதாக டெல்லியில் பேசப்படுகிறது.




தீருவில் சதுக்கத்தில் கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவு நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதிலிருந்து சில காட்சிகள்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும்

# பெண்கள் பங்கு பற்றும் பாரம்பரிய விளையாட்டு விழா

வேரடிமண் பெண்கள் பங்கு பற்றும் பாரம்பரியக் கலை விளையாட்டு விழா, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்டு வருகிறது.

கலாசாரப் பண்பாடு அழிந்து போகாது அவற்றைப் பாதுகாப்பதற்கு எங்கள் முன்னோர் தேடி வைத்த தேட்டங்களை எதிர்கால சந்ததியினருக்கு கொடுக்கும் முகமாகவே இந்த நிகழ்வு இடம் பெறுவதாக புனர்வாழ்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

பெண்கள் பங்குபற்றும் கிளித்தட்டு, எல்லி குத்துதல், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், பேணிப்பந்து, கண்கட்டி அடித்தல், கயிறடித்தல், தடை ஓட்டம், சடுகுடு, சட்டி முட்டி, கோழி கோட்டான், நாயும் இறைச்சியும், நரியும் முந்திரிக் குலையும், ஒப்பு, கெந்தி அடித்தல், வரரோட்டம், பசுவும் புலியும், முட்டை எறிந்து பிடித்தல், கைப்பின் கைப்பின் யார் கை, சாக்கு ஓட்டம், தொப்பி மாற்றுதல், எட்டுக் கோடு, உருளைக்கிழங்குப் பிரட்டல், கிட்டிப்புல், கொக்கரக்கோ, எவடம் எவடம், புளிச்சல், குளங்கரை, எங்கிருந்து வாரீர், கீச்சு மாச்சு தம்பளம், சிங்கினி நோனா, ஆச்சி ஆச்சி என்ன தேடுகிறாய், முள்ளுப் பிராண்டி, நெய் நெய் நெய், கோழி பற பற பற, ஓரம்மா கடைக்கு போனா, அரசன் வந்தான், 1,2,3, பம்பலப்பிட்டி, சொக்கான், தாயம், பாண்டிக் குண்டு, மாபிள் அடித்தல், பூப்பறிக்க போகிறோம், போர்த் தேங்காய் அடித்தல், கிஸ் அடித் தல், ஓடு ஓடு நில், மாங்கொட்டை விளையாட்டு, கப்பல் கோடு, ஐஸ்போல் ஆகியன விளையாட்டு க்களாக காணப்படுகின்றன.

இந்த நிகழ்வில் வயது முதிர்ந்த மூதாட்டிகள், பாடசாலை செல்லும் சிறுமிகள், இளம் பெண்கள், திருமணமான பெண்கள் எனப் பலரும் பங்குபற்றுகின்றனர் என அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தெரிவிக்கின்றது.

## வடிகால் மூடிகள் சேதமடைந்துள்ளன

குருநகர், மவுண்கார்மல் வீதி, கடற்கரை வீதிச் சந்திப்பில் வீதிகளுக்கு ஊடாகச் செல்லும் வடிகால் மூடிகள் உடைந்து சேதமாகி இருக்கின்றன.

மேற்படி மூடிகள் சேதடைந்து பல மாதங்களாகியும் இன்னமும் திருத்தப்படாமல் இருப்பதால் இரவு, பகல் வேளைகளில் அப்பகுதியால் பயணிக்கும் பாதசாரிகள் மற்றும் வாகனங்கள் வடிகாலுக்குள் வீழ்ந்து பாதிப்புக்குள்ளாகும் அபாயம் தோன்றி உள்ளது. (206)

# பாலியல் பலாத்கார முயற்சி சந்தேக நபர் மூவர் கைது

யுவதியொருவரைக் கத்தியைக் காட்டி மிரட்டி பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்த சம்பவம் தொடர்பான சந்தேக நபர் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திரையரங்குக்கு தனது உறவினர்களுடன் சென்ற யுவதியை அறிமுகமான நபரொருவருடன் வேறும் இருவர் கொட்டடிப் பகுதிக்குக் கூட்டிச் சென்று பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றனர். இவ் விடயம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களில் ஒருவர் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். மற்றைய இரண்டு சந்தேக நபர்களும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (தீ)


**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த

**ஜெய்**

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-2005)

**விற்பனைக்கு**

TATA - 450 சிவப்பு நிற CANDER 15000KM ஓடிய நிலையில் இல. 0111 - WP -HK. 2797 பினான்ஸ் உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 265 1/2 புளுமண்டல் வீதி, கொழும்பு - 13

T.P: 011 - 2385530

0777 - 666704 (593)

**திறைஞ்சனல்** சங்கானை

சரண், மீராவாசுதேவன் நடித்த

**உன்னைச் சரணடைந்தேன்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

**TOMP RAIDER II** (சி-2004)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 1இல் இருந்து 11 வரை எல்லாப் பாடங்களும்,

GRAMMAR, SPOKEN ENGLISH மேற்படிப்பு வரை

பதிவுக்கு:- அதிபர்

426 (302), K.K.S வீதி, யாழ்ப்பாணம். (588)

**யசோ இறபர் ஸ்டாம்**

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட், 35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/2152)


## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

பிரான்சில் வசிக்கும் 35 வயது நிரம்பிய சதய நட்சத்திரமும் உதயத்து செவ்வாய் கொண்ட மணமகனுக்கு பெற்றோர் மணமகளை தேடுகிறார்கள். மணமகள் வெளிநாட்டில் இருப்பது விரும்பத்தக்கது சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 22 மே/பா நமது ஈழநாடு, இல, 267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி/2154)

### தேவை

ஸ்ரூடியோ வேலை பழக ஆர்வமுள்ள 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் தேவை. யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. 31-01.2004 க்கு முன விண்ணப்பிக்கவும். வேலை பழகும் போது ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும்.விளம்பர இல-21 மே/பா நமது ஈழநாடு 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.(சி/2153)

### ENGLISH CLASSES

மாணவர்களுக்கும், வளர்ந்தவர்களுக்கும் Spoken English,O/L,A/L பல்கலைக்கழக மாணவர்கள் நல்ல பெறுபேறடையக்கூடியதாக அவரவருக்கு வசதியான நேரத்தில் இலகுவான முறையில் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரினால் ஆங்கிலம் கற்பிக்கப்படும். தொடர்புக்கு: இல.33, பலாலி வீதி, இலுப்பையடிச்சந்தி (தெற்கு), யாழ்ப்பாணம்.(594)


ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை வெளிநாடுகளுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

WESTERN UNION / MONEY TRANSFER SM வெஸ்டன் யூனியன் / பணப் பரிமாற்றம் மூலம்

20 நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

**ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்**

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 5392
Fax:- 2223214
E-mail:- smokr@eureka.lk

சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P:- 060 2212472

**பொங்கு தமிழ் 3 ம் ஆண்டு நிறைவு நாள்**

இடம் :- யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்

காலம் :- 17.01.2004 (இன்று) பி.ப.3.00 மணி (பு.நே)

சிறப்புரைகள் :- பல்கலைகழக சமூக பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகளின் உரைகள்.

சிறப்பு நிகழ்வு :- தமிழீழ மகளிர் கலைபண்பாட்டுக் கழகம் வழங்கும் "தாயக இன்னிசை கானங்கள்"

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"எமது நிலம் எமக்கு வேண்டும்"

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ் பல்கலைக் கழகம். (595)

# ஜே. வி. பி – சுதந்திரக்கட்சி கூட்டின் பின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல்

## ஜனாதிபதி சந்திரிகா முடிவு

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான கூட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தம் எதிர்வரும் 20 ஆம் திகதி கைச்சாத்திடப் பட்டதும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க நாடாளுமன்றத்தினைக் கலைத்து, தேர்தலுக்கான அறிவிப்பினை விடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல மாதங்களாக இழுபறிநிலையிலிருந்த சுதந் திரக்கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலான கூட்ட மைப்பு தொடர்பான பேச்சுக்கள் முற்றுப்பெற்றுள்ள துடன், கூட்டமைப்பும் உறுதியாகியுள்ளது.

இந்தநிலையில் கூடியவிரைவில் நாடாளுமன் றத்தைக் கலைத்து, தேர்தலை நடத்த ஜனாதிபதி நடவ டிக்கை எடுக்கவுள்ளதாகப் பொதுஜன ஐக்கிய முன் னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டமைப்புக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் இம்மாத இறுதிக்குள் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடை யிலான கூட்டமைப்பு குறித்த இறுதி பேச்சுவார்த்தை கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மாளிகையில் பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணிவரை சுமார் நான்கு மணித்தியாலங்கள் நடைபெற்றன.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இப் பேச்சு வார்த்தையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் அதன் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் அமுனுகம, நிமல் சிறிபாலடி சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர். ஜே.வி.பி.யின் சார்பில் அதன் செயலாளர் டில்வின் சில்வா, பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, எம்.பி.க் களான விஜித்த ஹேரத், அனுரகுமார திசாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர். இப்பேச்சுவார்த்தையில் கூட்டமைப்புக்கான இறுதி முடிவு எடுக்கப்பட்டது.

எதிர்வரும் 20ஆம் திகதி இரு கட்சிகளுக்கும் இடை யிலான கூட்டமைப்புக்கான ஒப்பந்தம் கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உள்ள குழு அறையில் இடம்பெறவுள்ளது. மண்டபத்தின் பிரதான மண்டபம் முன்கூட்டியே முன்பதிவு செய்யப்பட்டுள்ளமை யினாலேயே குழு அறையில் ஒப்பந்தத்தினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

20 ஆம் திகதி சுபமுகூர்த்தத்தில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதி யாக இருந்தமையினாலேயே அன்றைய தினம் பிரதான மண்டபம் இல்லாத போதிலும் குழு அறையில் ஒப்பந் தத்தை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டு ஒப்பந்தத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும், ஜே.வி.பி.யின் சார்பில் அதன் செயலாளர் டில்வின் சில்வாவும் கையொப்பமிடவுள்ளனர்.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவத்திற்கு 550 பேர் மட்டுமே அழைக்கப்படவுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டமைப்பின் தலை வராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே இருப்பார். கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் பதவி ஜே.வி.பி.யின ருக்கு வழங்கப்படவுள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் போட்டி யிடுவதற்கான தொகுதி உடன்பாடும் காணப்பட்டுள்ளது.

இவற்றை உள்ளடக்கிய உடன்படிக்கை தற்போது இரு கட்சியினரையும் உள்ளடக்கிய குழுவினரால் தயா ரிக்கப்பட்டு வருகின்றது.

இக் கூட்டமைப்புக்கு தனியான சின்னம், தனியான பெயர் முன்வைக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

கூட்டமைப்பு உருவானதும் எந்தவேளையிலும் நாடாளு மன்றத்தை கலைக்க ஜனாதிபதி இணங்கியுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு முன்னர் நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று ஜே.வி.பி. ஜனாதிபதியிடம் கோரியுள்ளது. இதற் கிணங்கவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படவுள்ளது.



கொழும்பு புறநகர்ப்பகுதியில் கட்டுவனவில் நேற்றுமுன்தினம் சேதமாக் கப்பட்ட தேவாலயத்தை காணலாம்.

### வடக்கு - கிழக்கு புனரமைப்பு குறித்து

# ஜப்பானிய வங்கி அதிகாரிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை

வடக்கு - கிழக்கு மாகாண புனரமைப்பு நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜப்பானியப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கியின் சிரேஷ்ட பிரதி நிதிகளுடன் ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே, இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

நகர நீர் விநியோகத்திட்டம், கொழும்பு துறைமுக அபிவிருத்தி, தென் பிராந்தியத்துக்கான அதிவேக நெடுஞ்சாலை என்பனபற்றியும் இந்தச் சந்திப்பில் ஜப்பானிய அதிகாரிகளும், ஜனாதிபதி சந்திரிகாவும் ஆராய்ந்தனர்.

இந்தப் பணிகளுக்கு ஜப்பானிய வங்கி வழங்கியுள்ள நிதி உதவி யைக்கொண்டு, முன்னெடுக்கப்படும் திட்டங்கள் குறித்து இந்தச் சந்திப் பில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட குழுவினருக்கு, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கி யின் ஆளுநர் கியோசுகே சினோசாவா தலைமை தாங்கினார்.

# கடலில் ஒரு மாதத்திற்கும் மேலாக தத்தளித்துக் கொண்டிருந்த மீனவர்கள்!

## வெலிகம பொலிஸாரால் மீட்பு

ஒரு மாதத்திற்கு மேலாகக் கட லில் தத்தளித்துக்கொண்டிருந்த நான்கு இந்தோனேசிய மீனவர்களை வெலிகம பொலிஸார் மீட்டுள்ளனர்.

ட்ரோலர் ஒன்றில் கடந்த வரு டம் டிசம்பர் மாதம் முதல் இலங் கைக் கடற்பரப்பில் இந்த மீனவர் கள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட் டனர். இவர்களின் ட்ரோலர் தொழில் நுட்பக் கோளாறினால் செயலிழந்த தால் ஒரு மாதத்திற்கும் மேலாக கடலில் தத்தளித்தனர்.

28 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட இந்த மீனவர்கள் நால் வரையும் மீட்ட வெலிகம பொலி ஸார் நீதிமன்றத்தில் ஆஜர் செய் தனர். மீன்பிடி அமைச்சக அதிகாரிகள் இந்த மீனவர்களுக்கு இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி அளிக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

# புத்தளம் - மதுரங்குளிப்பகுதியில் சிங்களவர் - முஸ்லிம்கள் மோதல்

புத்தளம் மதுரங்குளிப் பகுதியில் முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக் கும் இடையே இனக்கலவரம் ஒன்று தோன்றியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு வரது முச்சக்கரவண்டி தாக்கப்பட்ட சம்பவம் இந்தப்பகுதியில் இடம்பெற் றிருந்தது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் முஸ்லிம்களுக் குச் சொந்தமான எரிபொருள் நிலை யம் ஒன்றுக்குள் புகுந்த சிங்களவர்கள - அந்த எரிபொருள் நிலையத்தைத் தாக்கினர்.

இதனைத் தொடர்ந்து தனியார் பஸ் ஒன்றிற்கும் கல்வீச்சு இடம் பெற்றது.

இந்தச் சம்பவங்களையடுத்து, பொலிஸார் அந்தப்பகுதிக்குப் பெரு மளவில் குவிக்கப்பட்டு, இராணுவத் தினரும் கடமைக்கு அழைக்கப்பட் டுள்ளனர்.

இதேவேளை, கடந்த மூன்று மாத காலமாக சிங்கள, முஸ்லிம் இனங்க ளுக்கிடையே புத்தளம் பகுதியில் கல வரங்கள் தொடர்ந்து நடைபெற்று வரு கின்றமையும் குறிப்பிடத்தக்கது.(01)

## பொலிஸாரால் கஞ்சா கைப்பற்றப்பட்டது

நேற்றுமுன்தினம் மன்னார் - முருங்கன் தோட்ட வெளிப்பகுதியில் கலப்படமற்ற 214 கிராம் கஞ்சாத் தூள் முருங்கன் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டது.

இது தொடர்பாக மரியதாஸ் என்ற நபர் உட்பட மூவர் முருங்கன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, மன்னார் ஆரம்ப நீதிமன்றில் ஆஜர்ப டுத்தப்பட்டனர்.

இவர்கள் தோட்டவெளிப் பகுதி யில் அண்மையாக கடற்கரையில் தமது வியாபாரத்தினை நீண்ட நாட் களாக மேற்கொண்டு வந்தனர் என வும், 214 கிராம் கஞ்சாத்தூளை ஒரு கிலோகிராம் அளவு வேறு பொருட்களுடன் கலந்து, இவர்கள் விற்றுவந்தனர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

(202)

# வட - கிழக்கு ஆசிரியர் ஆட்சேர்ப்பு பரீட்சை மாவட்டம் தோறும் நடத்துவதற்கு இணக்கம்

வடக்கு - கிழக்கு மாகாண பாட சாலைக்கான ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சையினை கொழும் பில் மட்டும் நடத்தாது, மாவட்டங்கள் தோறும் நடத்துவதற்குப் பரீட்சை ஆணையாளர் டபிள்யூ.ஏ.எம். விஜய சிறி இணக்கம் தெரிவித்தார். புதிய ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை கொழும்பில் மட்டுமே நடத்தப்படும் என்று முன்னர் பரீட்சைத் திணைக் களம் அறிவித்திருந்தது.

பரீட்சையினைக் கொழும்பில் மட்டும் நடத்துவதற்கு ஆட்சேபனை தெரிவித்து, தமிழர் விடுதலைக் கூட் டணியின் தலைவர் வி.ஆனந்தசங் கரி - பரீட்சை ஆணையாளருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அத்தோடு, வேறு பலரும் இக் கோரிக்கையை விடுத்திருந்தனர். இதனையடுத்தே பரீட்சை ஆணை யாளர் போட்டிப் பரீட்சையினை வட கிழக்கின் மாவட்டங்கள் தோறும் நடாத்த நடவடிக்கை எடுப்பதாக அறி வித்துள்ளார். ஆனந்தசங்கரி எம்.பி. அனுப்பிய கடிதத்திற்குப் பதிலளித் துள்ள பரீட்சை ஆணையாளர், இதற் கான நடவடிக்கையினை எடுப்ப தாக உறுதியளித்துள்ளார்.

# நீதிமன்ற விசாரணைகள் யாவும் சிறைச்சாலைகளுக்குள்ளேயே!

## பாதுகாப்புக் கருதி புதிய திட்டம்

கொழும்பில் நீதிமன்றக் கட்டடத் தில் வைத்து பாதாள உலகத் தலை வர் தம்மிக அமரசிங்க சுட்டுக்கொல் லப்பட்டதையடுத்து நீதிமன்ற விசார ணைகளை சிறைச்சாலைக்குள் நடத்த சிறைச்சாலைகள் ஆணையாளர் முடிவு செய்துள்ளார்.

சிறைச்சாலைக்குள் சிறையதி காரிகள் மட்டும் பங்குபற்றும் வகை யில் நீதிமன்ற விசாரணைகள் நடத் தப்படும்.

இந்த தீர்மானத்தின் அடிப்படை யில் நேற்றுமுன்தினம் வெலிக்க டைச் சிறைச்சாலையில் முதலாவது நீதிமன்ற விசாரணைகள் கொழும்பு மேலதிக நீதிவான் பி.ஆர்.ரத்னா யக்க தலைமையில் இடம்பெற்றது.

சிறைச்சாலை ஆணையாளர் ரூபி மர்ஸூக், பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுடன் நடத்திய முக் கிய கலந்துரையாடலையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

# பொங்குதமிழ் நிகழ்வுக்கு பொலிஸார் ஒத்துழைப்பு!

## பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

மட்டக்களப்பில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுக்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

பொங்கு தமிழ் நிகழ்வு தொடர்பாக நேற்று முன்தினம் பொலிஸ் அத்தியட்சகர் அலுவல கத்தில் இடம்பெற்ற விசேட கூட்டமொன்றைய டுத்தே, அவர் இந்த உறுதிமொழியை வழங்கி யுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பொங்குதமிழ் ஏற்பாட் டுக் குழுவைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஸ்ணபிள்ளை, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேரா சிரியர் ம.சே.மூக்கையா, மட்டக்களப்பு வர்த் தக சங்கத் தலைவர் ராஜன் சத்தியமூர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவ னங்களின் ஒன்றியத் தலைவர் ரஞ்சன் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் மீண் டும் ஆரம்பிக்கப்பட வேண்டும், நீதியுடன் கூடிய நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே பொங்குதமிழ் நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று இந்தக் கூட்டத்தில் பொலிஸ் அத்தியட்சக ருக்கு விளக்கமளிக்கப்பட்டதை அடுத்து, பொங்குதமிழ் நிகழ்வுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க அவர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

பொங்குதமிழ் நிகழ்வு இடம்பெறும் மைதா னத்துக்கு தேவையாயின் பாதுகாப்பு வழங்கு வதற்கும், பிரசாரப் பணிகளில் ஈடுபடுவோ ருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் பொலிஸ் அத்தியட்சகர் சம்மதம் தெரிவித்ததாக கூட் டத்தின் முடிவில் பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

# அமைச்சர்களின் மகன்மார் மூவரும் குற்றப்புலனாய்வுத்துறையிடம் சரண்

(கொழும்பு)

அமைச்சர் ஒருவரின் உறவினர்களை தாக்கியதாக் கூறப்படும் அமைச்சர்களின் மகன் மார் மூவர் - கொழும்பு குற்றப்புலனாய்வுத் துறையில் சரணடைந்துள்ளனர்.

அமைச்சர் கபீர் காசிமினுடைய உறவினர் கள் நான்குபேரைத் தாக்கி, காயப்படுத்திய துடன், அந்த நான்கு பேரின் உடமைகளைச் சேதமாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டவர்களே சரணடைந்துள்ளனர்.

அமைச்சர் திசநாயக்காவின் இரண்டு மகன் மார், அமைச்சர் மகிந்த விஜயசேகரவின் மகன் ஒருவருமாக மூன்று பேர் நேற்று கொழும்பு குற்றப்புலனாய்வுத்துறையினரிடம் சரணடைந்தனர்.

இவர்களை நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டது.

இவ்வாறாகச் சரணடைந்த மூன்று பேரை யும் கைது செய்யுமாறு சி.ஐ.டியிடம் கொழும்பு நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது குறிப் பிடத்தக்கது.

இதனடிப்படையில் சி.ஐ.டியினர் அவர்க ளைத் தேடிச்சென்ற போதிலும், கைதுசெய்ய முடியவில்லை என்றும் அவர்கள் நேற்று குற்றப்புலனாய்வுத்துற்றயிடம் தாமாகவே சரண டைந்துள்ளனர்.

இதேவேளை, தாக்குதல்களுக்கு உள் ளானவர்கள் - குற்றப்புலனாய்வுத்துறைக்குச் சென்று தமது முறைப்பாட்டை வாபஸ் பெற் றுக் கொண்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் தொடர் பாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, பொது உடமை சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்டிருப்ப தால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவேண்டிய தேவை இருப்பதாக குற்றப்புலனாய்வுத்துறை கூறியுள்ளது.

(01)

# 148 ஓட்டங்களால் சிம்பாப்வே அவுஸ்ரேலியாவிடம் தோல்வி

இந்திய - அவுஸ்ரேலிய - சிம்பாப்வே அணிகளுக்கிடையில், அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் முக்கோண ஒருநாள் போட்டித் தொடரில் நேற்று ஹோபர்ட்டில் நடந்த அவுஸ்ரேலிய சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான போட்டியில், அவுஸ்ரேலிய அணி 148 ஓட்டங்களால் சிம்பாப்வேயை வென்றது.

கடந்த இரண்டுபோட்டிகளில் விளையாடாத அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரட்லீ நேற்றைய போட்டியில் சேர்க்கப்பட்டார். கில்ஸ்பி நீக்கப்பட்டார்.



அவுஸ்ரேலியக் கப்டன் ரிக்கிபொன்டிங் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என்று அறிவித்தார். தொடக்க ஆட்டக்காரர்களாக கில்கிறிஸ்டும், ஹைடனும் களம் இறங்கினார்கள்.

கில்கிறிஸ்ட் ஆட்டத்தில் அனல் பறந்தது. சிம்பாப்வே பந்துவீச்சை விளாசித்தள்ளி ஓட்டங்களைக் குவித்தார். இதேபோல, ஹைடனும் சிறப்பாக ஆடினார்.

22.3 ஆவது ஓவரில் அவுஸ்ரேலிய தொடக்க ஜோடி சரிந்தது. ஹைடன் 63 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அப்போது, ஓட்ட எண்ணிக்கை 140 ஆக இருந்தது. அடுத்து ரிக்கிபொன்டிங் களம் வந் தார்.

மறுமுனையில் இருந்த கில்கிறிஸ்ட் அதிரடியாக விளையாடி சதமடித்தார். அவர் 89 பந்துகளில் 6 பவுண்டறி, ஒரு சிக்ஸருடன் 100 ஓட்டங்களைப்பெற்றார்.

37.3 ஆவது ஓவரில் 246 ஓட்டங்களாக இருந்தபோது, பொன்டிங் ஆட்டமிழந்தார். அவர் 37 ஓட்டங்களை எடுத்தார்

3 ஆவது விக்கெட்டுக்கு கில்கிறிஸ்ட்டுடன் சைமன்ட்ஸ் சோடிசேர்ந்தார். கில்கிறிஸ்ட் தொடர்ந்து சிம்பாப்வே பந்துவீச்சை விளாசித்தள்ளி ஒட்டங்களை எடுத்தார். ஓட்டஎண்ணிக்கை 310 ஆக இருந்தபோது அவர் ஆட்டமிழந்தார்.

கில்கிறிஸ்ட் 126 பந்துகளில் 13 பவுண்டரிகள், 3 சிக்ஸருடன் 172 ஓட்டங்களைக்குவித்தார். ஒருநாள்போட்டியில் அவரது அதிக பட்ச ஒட்டங்கள் இதுவாகும். ஒருநாள்போட்டியில் அதிக ஒட்டங்களை எடுத்த 2 ஆவது அவுஸ்ரேலிய வீரர் கில்கிறிஸ்ட் ஆவார். 2000 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக மார்க்வோ 173ஒட்டங்களை எடுத்திருந்தார். அதன் பிறகு அவுஸ்ரேலிய விக்கெட்டுக்கள் சரிந்தன. மார்டின் மட்டுமே அடித்தாடினார்.

நிர்ணயிக்கபட்ட 50 ஓவர்களில் அவுஸ்ரேலிய 7 விக்கெட் இழப்பிற்கு 344 ஒட்டங்களைக் குவித்தது. சிம்பாப்வே அணியின் பந்து வீச்சாளர்களில் அணித்தலைவர் ஹீத்ஸ்ரிக் 3 விக்கெட்டுக்களையும் எர்வின் 2 விக்கெட்டுக்களையும், கிரான் பிளவர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

345 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் சிம்பாப்வே களமிறங்கியது.

தொடக்கமே அந்த அணிக்கு அதிர்ச்சியாக இருந்தது. 5 ஆவது ஓவரில் சிபந்தா ஒரு ஓட்டத்துடன் பிரட்லீ பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து களம் வந்த வெர்முலன் ஒரு ஓட்டத்துடன் வில்லியம்ஸ் பந்தில் ஆட்டமிழந்தார். 19 ஓட் டங்களை எடுப்பதற்குள் சிம்பாப்வே 2 விக்கெடடுக்களை இழந்தது.

அடுத்து இப்ராஹிம்முடன் 3 ஆவது இணைப்பாட்டமாக ஜோடிசேந்தவர் கிரான்பிளவர் இருவரும் ஆடிக்கொண்டிருந்தவேளை ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான இப்ராஹிம் 21 ஒட்டங்களை எடுத்த நிலையில் சைமன்ஸின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஓட்டஎணணிக்கை 36.

அடுத்து களமிறங்கியவர் எர்வின். இவரையும் நீண்டநேரம் நிற்கவிட அவுஸ்ரேலியப் பந்துவீச்சாளருக்குமனமில்லை. எட்டு ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் கொக்கின் பந்துவீச்சில் பிக்கலிடம் பிடிகொடுத்து இவரும் அணி 52 ஓட்டங்களை பெற்றிருந்தபோது வெளியேறினார்.

நான்காவது விக்கெட் ஜோடியாகச்சேர்ந்து கொண்டவர் அணித்தலைவர் ஸ்ரீக். இவருடன் பிளவர், இணைந்து ஆடிக்கொண்டிருந்த நிலையல் 44 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார். அப்போது அணியின் ஒட்ட எண்ணிக்கை 93. அடுத்து வந்தவர் அணியின் இளம் துடுப்பாட்டக்காரர் ரைபூ அணியின் ஓட்டஎண்ணிக்கை 195 ஆக இருக்கும்போது இவர் 44 ஓட்டங்களுடன் பிக்கலின் பந்துவீச்சில் ஹைடனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் 50வது ஓவர்கள் நிறைவில் சிம்பாப்வே அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. இதில் அணித்தலைவர் ஸ்ரீக், மற்ஸ்கென்யறி இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 64, 1ஓட்டத்தைப்பெற்றனர்.

பந்துவீச்சில் பிரட்லீ, வில்லியம்ஸ் பிக்கல், சைமன்ஸ், கொக் ஐவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இறுதியல் அவுஸ்ரேலியா 148 ஓட்டங்களால் சிம்பாப்வேயை தோற்கடித்தது. ஆட்ட நாயகனாக கில்கிறிஸ்ட் தெரிவானார்.

முத்தரப்பு சுற்றுப்போட்டியின் 5 ஆவது போட்டிஇந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நாளை பிரிஸ்பேர்னில் நடைபெறவுள்ளது.

## மார்ச் 5 ஆம் திகதி இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் பயணம்!

இந்திய கிரிக்கட் அணி வருகிற மார்ச் 7 ஆம் திகதி முதல் பாகிஸ்தானில் 40 நாள் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. இந்திய அணி மார்ச் 5 ஆம் திகதி பாகிஸ்தான் புறப்பட்டுச் செல்கின்றது. கராச்சியில மூன்றுநாள் ஆட்டம் 7 ஆம் திகதி தொடங்குகிறது. முதல் டெஸ்ட் கராச்சியிலும், 2 ஆவது டெஸட் லாகூரிலும், 3 ஆவது டெஸ்ட் பைசலாபாத்திலும், முதல் இரண்டு ஒருநாள் போட்டிகள் லாகூரிலும், 3 ஆவது போட்டி ராவல் பிணடியிலும், 4 ஆவது போட்டி பெஷாவரிலும், 5 ஆவது போட்டி கராச்சியிலும் நடைபெறவுள்ளது.

இந்தத் தகவல்களை பாகிஸ்தான் கிரிக்கட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

## ஒரு நாள் கிரிக்கட் போட்டியில்; டெண்டுல்கர் மீண்டும் முதலிடம்!



கிரிக்கட் வீரர்களின் வரிசைப்பட்டியலை சாம்சங் நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன்படி ஒருநாள் போட்டியில் துடுப்பாட்ட வரிசையில் இந்திய வீரர் டெண்டுல்கர் முதல்இடத்தைப் பிடித்துள்ளார். அவர் 108 புள்ளிகளுடன் உள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு அவர் பாகிஸ்தான் புதுமுக வீரர் இம்ரான் பர்கத்திடம் முதல்இட வரிசையை இழந்தார். தற்போது மண்டும் முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

இம்ரான் பர்கத் 98 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும், கலிஸ் (தென் ஆபிரிக்கா) 93 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும், கெய்ல் (மேற்கிந்தியதீவுகள்) 4 ஆவது இடத்திலும், கங்கூலி 5 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சில் முரளீதரன் 139 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார். நிற்னி (தென் ஆபிரிக்கா) 138 புள்ளியுடன் 2 ஆவது இடத்திலும், அண்டர்சன் (இங்கிலாந்து) 132 புள்ளியுடன் 3 ஆவது இடத்திலும், பிளின்டொப் (இங்கிலாந்து) 4 ஆவது இடத்திலும், பிரேக்கன் (அவுஸ்ரேலியா) 5 ஆவது இடத்திலும் உள்ளனர்.

அவுஸ்ரேலியா தொடர்ந்து முதலிடத்திலுள்ளது. பாகிஸ்தான், தென்ஆபிரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, இலங்கை, மேற்கிந்தியதீவுகள் ஆகிய நாடுகள் முறையே 2 முதல் 7ஆவது இடங்களில் உள்ளன. டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்ட வரிசையில் மேற்கிந்தியதீவுகள் அணியின் கப்டன் பிரைன் லாரா 164 புள்ளிகள் பெற்று முதலிடத்திலுள்ளார்.

ரக்கி பொண்டிங் (அவுஸ்ரேலியா) 2 ஆவது இடத்திலும், ஹைடன் (அவுஸ்ரேலியா) 3 ஆவது இடத்திலும், சிமித் (தென் ஆபிரிக்கா) 4 ஆவது இடத்திலும், டிராவிட் (இந்தியா) 6 ஆவது இடத்திலும் உள்ளனர். பந்து வீச்சில் நிற்னி 142 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தில் உள்ளார். முரளீதரன், சொகைப் அக்தர் (பாகிஸ்தான்), பொலக் (தென் ஆபிரிக்கா) கிலஸ்பி (அவுஸ்ரேலியா), கும்ளே (இந்தியா) ஆகியோர் 2 முதல் 6 ஆவது இடங்களில் உள்ளனர்.

அணிகள் வரிசையில் அவுஸ்ரேலியா 80 புள்ளி பெற்று தொடர்ந்து முதலிடத்திலுள்ளது. பாகிஸ்தான் 2 ஆவது இடத்திலும், தென் ஆபிரிக்கா 3 ஆவது இடத்திலும், இங்கிலாந்து 4 ஆவது இடத்திலும், மேற்கிந்தியதீவுகள் 5 ஆவது இடத்திலும், இந்தியா 6 ஆவது இடத்திலும், நியூசிலாந்து 7 ஆவது இடத்திலும், இலங்கை 8 ஆவது இடத்திலும் உள்ளன.

# விளையாட்டு

## அத்தப்பத்து மீது விசாரணையை நடத்த ஐ.சி.சி அதிகாரிகள் கொழும்பு வருகை

(கொழும்பு)

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் கடந்த மாதம் கண்டியில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது, இலங்கை வீரர் மாவன் அத்தப்பத்து தங்கியிருந்த அறையில் கண்டெடுக்கப்பட்ட பணம் தொடர்பாக, அவர் மீது விசாரணையை மேற்கொள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் கொழும்பு வந்துள்ளனர்.

கொழும்பு வந்துள்ள இவர்கள் மாவன் அத்தப்பத்து தங்கியிருந்த ஹோட்டலின் அதிகாரிகளையும், மற்றும் பத்திரிகையாளர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சம்பவம தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையைச் சேர்ந்த இரு அதிகாரிகள் விசாரணை நடத்தவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் இங்கிலாந்து அணிக்கெதிராக இலங்கை அணி கண்டியில் டெஸ்ட் போட்டியில் விளையாடிக்கொண்டிருந்தபோது, மாவன் அத்தப்பத்து தங்கியிருந்த ஹோட்டல் அறையிலிருந்து 1.1 மில்லியன் ரூபாய்கள் கண்டுபிடிக்கபபட்டமை குறிப்பிடத்தக்கது.




## நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் நூறு சதவீதம் வெற்றிபெறுவோம்!

## ஜெயலலிதா தெரிவிப்பு

வரும் நாடாளுமன்றத் தேர்தலில அ.தி.மு.க நூறு சதவீதம் வெற்றிபெறும், அதற்கேற்ற வகையில் தொணடர்கள் கடுமையாக உழைக்கவேண்டும் என்று - முதல்வரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா தெரிவித்தார்.

அ.தி.மு.க நிறுவனர், எம்.ஜி.ஆரின் பிறந்த நாள் நேற்று கொண்டாடப்பட்டது. அதையொட்டி ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில்-

இன்று நடப்பது எம்.ஜி.ஆர் ஆடசி, இந்த ஆட்சியே அமரர் எம்.ஜி.ஆருக்கு நாம் செலுத்தும் காணிக்கையாகும்.

எம்.ஜி.ஆரின் நல்லாட்சி தொடர, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நூறு சதவீத வெற்றியை அ.தி.மு.க பெறவேண்டும், பெறும். அதற்கேற்ற வகையில் கருததுவேறுபாடுகளை மறந்து அ.தி.மு.க தொண்டர்கள் கடுமையாகப் பாடுபடவேண்டும்.

நாடாளுமன்றத்தில் நமது கோரிக்கைகள் ஒரே குரலில் ஒலித்தால்தான் உரிமைகளை முழுமையாகப் பெறமுடியும். கடந்த மூன்று ஆண்டுகளில் அ.தி.மு.க செய்துள்ள சாதனைகள் முப்பது ஆண்டுகால சாதனைக்கு சமம்.

எம்.ஜி.ஆர் பிறந்த தினத்திற்கு ஈடாக இந்தியாவில் வேறு எந்த தினத்தையும் கூற முடியாது. எம்.ஜி.ஆர் பெயரைக் கேட்டாலே இனிக்கும், நினைத்தாலே இனிக்கும்.

எம்.ஜி.ஆர்.பிறந்த தினத்திற்கு ஈடாக இந்தியாவில் வேறு எந்த தினத்தையும் கூற முடியாது. எம்.ஜி.ஆர்.என்ற பெயரைக் கேட்டாலே இனிக்கும், நினைத்தாலே இனிக்கும்.

முளைத்தபோதே வானைப் பிளந்து வளர்ந்த விருட்சம் அ.தி.மு.க. அரசியல் புரட்சி மட்டுமல்லாது அன்புப்புரட்சியையும் நிகழ்த்தியுள்ளார் என்று ஜெயலலிதா தெரிவித்தார்.

# பெரியோர் பண்பு

நெடுநேரமாகக் காத்திருந்தான் படகோட்டி. அக்கரையிலிருக்கும் கிராமத்திற்குப்போக காலையிலிருந்து யாரும் வரவில்லை. அவனது இதயம் பாரமானது - காரணம் படகில் பயணம் செய்வோர் கொடுக்கும் சில லறைகள் தான் அவனு



டைய அன்றாட வருமானம். அப்படி எதுவும் கிடைக்கவில்லை என்றால் அன்று பட்டினிதான். அவன் மட்டுமல்ல, அவனை நம்பியிருக்கும் மனைவியும் ஐந்து குழந்தைகளும் பட்டினிதான். நேரம் கடந்து கொண்டே இருந்தது. பசியினால் வயிற்றில் வலி உண்டானது.

கண்ணுக்குமேலே கையை வைத்தபடி தூரத்தே பார்த்தான் படகோட்டி. ஒரு முதியவர் வந்துகொண்டு இருப்பது கண்ணுக்குத் தெரிந்தது. அந்த முதியவர் - நீண்ட தாடியும், மீசையும் வைத்தி ருந்தார். எளிமையாக உடை உடுத்தியிருந்தார்.

அந்த முதியவர் - நேரே படகோட்டியிடம் வந்தார். அவனிடம் மென்மையாகக் கேட்டார் - "படகோட்டியே, நான் மறுகரைக்குப் போகவேண்டும். கொண்டுபோய் விடுவாயா" என்று.

அவரைப் பார்த்தால் அந்த இடத்திற்குப் புதியவராகத் தெரிந்தது. எனவே, அவரிடம் இருந்து நிறையப் பணத்தைப் பறிக்கத் திட்டமிட்டான் படகோட்டி. "பெரியவரே, ஆற்றிலே வெள்ளம் நிறையப் போகிறது. அதனால், துடுப்பு வலிப்பது மிகவும் கஷ்டம்" என்றான் படகோட்டி. 'நான் அதற்கேற்படி நிறையப் பணம் தரு வேன்' என்றார் முதியவர்.

மகிழ்ச்சியுடன் அவரை ஏற்றிக்கொண்டு புறப்பட்டான் படகோட்டி. படகுளப்படி இருக்கு" என்று பேச்சுக் கொடுத்தார் முதியவர்.

"அதையேன் கேட்கிறீங்கள், எனக்குப் பெரிய குடும்பம். ஆனால், வருமானமோ கொஞ்சம்தான். நான் ஏதாவது சம்பாதிச்சுக் கொண்டு போனால் தான் அன்றைக்கு வீட்டிலே எல்லோருக்கும் சாப்பாடு" என்று குறைபட்டுக் கொண்டான் படகோட்டி.

ஆற்றைக் கடந்துகொண்டிருந்தது. "வாழ்க்கை எல்லாம்

"கவலைப்படாதேயப்பா உன் கஷ்டம் எல்லாம் ஒரு நாளைக்கு நீங்கிவிடும்" என்று ஆறுதல் கூறினார் முதியவர்.

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் முதியவரே, உங்க

# இதுதான்

ளைப்பற்றி எதுவுமே சொல்லவில்லையே" என்று கேட்டான் படகோட்டி.

முதியவர் சிரித்தார். "எனக்கு இருக்கும் இடம்தான் சொந்த ஊர். உலக ஆசைகளைத் துறந்தவன் நான். உயிர் மேல் எனக்கு ஆசை கிடையாது. எப்போதும் சாவதற்குத் தயாராக இருக்கிறேன். "வாழ்வே மாயமப்பா" என்றார் முதியவர். அவர் கூறியவற்றைக் கேட்டு வியந்தான் படகோட்டி.

திடீரென ஆற்றில் உண்மையிலேயே வெள்ளம் வந்துவிட்டது. நீரின் வேகம் அதிகரித்தது. படகு தடுமாறியது. ஒழுங்கீனமாகப் படகு ஓடியது. அதைக் கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடினான் படகோட்டி.

எதிர்பாராத விதமாக படகு ஒரு ஆழியில் சிக்கியது. "பெரிய வரே இனிமேல் நாம் உயிர்த் தப்புவது கஷ்டம் என அலறினான் படகோட்டி. "அப்படியா? எப்படியாவது படகைக் கரை சேர்த்து விடப்பா, வேண்டுமென்றால் நானும் துடுப்பு வலிக்கிறேன்" என்றார் முதியவர்.

"இருக்கிறது ஒரு துடுப்புத்தானே" என்றான் படகோட்டி. "சரி அதை நீயே வலித்துக் கொண்டிரு" என்ற முதியவர் - தனது கைகளை நீரில் அமிழ்த்தி, துடுப்பு விலிப்பதுபோல வேகமாகச் செய்தார். அதனால் அவருக்கு மூச்சு இறைத்தது, வியர்வை அரும்பியது.

அதிர்ஸ்டவசமாக மீண்டும் திடீரென வெள்ளம் வடிந்தது, நீர் குறைந்தது. ஒரு வழியாக இருவரும் சேர்ந்து படகைக் கரை சேர்த்தனர். தரையில் இறங்கியதும் முதியவரைக் ஏளனமாகப் பார்த்தான் படகோட்டி.

"யோவ் பெரியவரே, கொஞ்சநேரத்துக்கு முன் எப்பவும் சாவதற்குத் தயார் என்று சொன்னாயே? உயிர்மேல் ஆசை கிடையாது என்று கூறினாயே" என்று கிண்டலாகக் கேட்டான் படகோட்டி. 'ஆமாம். அதற்கு என்ன? இப்பவும் அப்படியேதான் சொல்கிறேன்' என்றார் முதியவர்.

"பிறகு ஏன் படகு சுழியில் மாட்டியபோது அப்படிப் பரபரத்தாய்? உயிரைக் காப்பாற்ற ஆசைப்பட்டு என்னன்னவோ முயற்சிகள் செய்தாய்" என்று கேட்டான்.

முதியவர் எதுவுமே பேசவில்லை. 'எதற்கு ஐயா நீ ஊரை ஏமாற்றிக்கொண்டு இப்படிப் பேசுகிறாய்' என மரியாதையின்றிப் பேசினான் படகோட்டி. ஆனால் முதியவர் - சாந்தமாகக் கூறினார் 'நான் எனது உயிரைக் காப்பாற்றுவதற்காக முயற்சி செய்ய வில்லை.

படகு கவிழ்ந்து நான் இறப்பதுபற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், அதேசமயம் சாகப்போவது நீயும்தானே. அதற்காகத்தான் நான் வேதனைப்பட்டேன்.

உன்னை எப்படியாவது காப்பாற்றிக் கரைசேர்க்கவேண்டும் என்றுதான் முயற்சி செய்தேன். ஏனென்றால், உன்னை நம்பித்தான் உன் குடும்பமே இருக்கிறது. மேலும் என்னால் நீ சாவதை எப்படியப்பா அனுமதிப்பேன்" என்று முதியவர் பணிவுடன் கேட்டார்.

தனது பிழையைப் படகோட்டி உணர்ந்து மன்னிப்புக் கோரி னான். முதியவர் அவரை மன்னித்துவிட்டு தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

## கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

### சென்றவார விடைகள்

காளமேகப் புலவர் கால் என்று குறிப்பிடுவது 1/4 அளவை. பறவை இனத்திற்கு 9 கால் என்பது (9x1/4 = 21/4) பறவை இனத்திற்கு இரண்டே கால்கள் என்ற பொருள் தரும். அதேபோல் யானைக்கு பதினேழு கால் என்பது (`171/4=41/4) நாலே கால்கள் என்று பொருள்.

மதன், சுதன், வீமன், சுரேஷ் நால்வரும் - ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்டனர். மதன் முதலாவதாக வரவில்லை. வீமனுக்கு அடுத்தாற்போல சுரேஷ் வந்தான். மதனுக்கும், சுரேசுக்கும் இடையில் யாரும் வரவில்லை. யார் முதலில் வந்தது?

**கண்டுபிடியுங்கள் - விடை அடுத்தவாரம்.**

இங்கே மடிக்கவும்



## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

# பனாமா

| | |
|---|---|
| நாடு | - பனாமாக் குடியரசு |
| தலைநகர் | - பனாமா |
| மக்கள் | - மெகஸிகோ, ஆபிரிக்க வழித்தோன் றல்கள், ஸ்பானியா, இந்தியா. |
| மொழி | - ஸ்பானிஸ், ஆங்கிலம், ஹிந்தி. |
| மதம் | - ரோமன் கத்தோலிக்கம், புரொட்டஸ்தாந்து, இஸ்லாம். |
| நாணயம் | - அமெரிக்க டொலர் (பல்போவா) |



அமெரிக்காவின் உதவியுடன் பனாமா 1930 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்தது. ஆனால், கொலம்பியா - பனாமாவை சுதந் திர நாடாக ஏற்றுக்கொள்ளவில்லை. 1921 ஆம் ஆண்டு அதிகளவிலான பணத்தை அமெரிக்கா கொடுத்தபின்னரே, கொலம் பியா - பனாமாவின் சுதந்திரத்தை ஏற்றுக் கொண்டது. ஆனால், 1984 ஆம் ஆண்டு மனுவேல் றொட்ரிகா எனப்படும் படை அதிகாரி - பனாமாவைத் தனது கட்டுப் பாட்டின்கீழ் கொண்டு வந்தார். இவரின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் அதிகளவான கொலைகளும், நிதி மோசடிகளும், போதைவஸ்து கடத்தல்களும் அதிகரித்துக் காணப்பட்டன.

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஊழல்கள் புரிந்து,




தன்னை அரசின் தலைவர்கள் என பிரகடனப்படுத்திக் கொண்டார். அத்துடன், அமெரிக்க அரசுடன் போர் தொடுக்கப் போவதாகப் பிரகடனப் படுத்தினார்.

அமெரிக்கா - பனாமாவை ஆக்கிரமித்து தாக்குதல் நடத்தியபோது, 2000 இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். அதிகமானோர் வீடற்ற நிலைக் குத் தள்ளப்பட்டனர். இறுதியாக றொட்ரிகா கைது செய்யப்பட்டு, அமெரிக்காவில் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

தற்போது 'புளோரிடா மாநிலத்தில் 40 ஆண்டு சிறை வாழ்க் கையை அனுபவித்து வருகின்றார். புகழ்பெற்ற பனாமாக் கால்வாய்- அமெரிக்காவினால் கைப்பற்றப்பட்டது. 2000 ஆம் ஆண்டு தை மாதம் மீண்டும் பனாமாவிடம் கையளிக்கப்பட்டது. பனாமாவின் தலைநகர் ஒரு வர்த்தக மையமாகத் திகழ்கிறது. பலநாட்டு மக்கள் இங்கு வாழ்கிறார்கள். புராதன சிற்பக்கலை இந்த நகரை அழகுபடுத்துகிறது. தொல்பொருள் காட்சியகம், ஜனாதிபதி மாளிகை, பனாமா கால்வாய், மெக்டோ போலியர் தேவாலயம் என்பன பனாமா நகரை மெருகுபடுத்துகின்றன. உலகிலுளள கால்வாய்களில் அதிமுக்கியத்துவமானதும், தொழில்நுட்பத்தின் சிறந்த வெளிப்பாடாகவும் பனாமா கால்வாய் அமைந்துள்ளது.

**முக்கிய தொழில்கள்:** மரங்களில் சிற்பங்களைச் செதுக்குதல், நெசவு, களி மட்பாண்ட உற்பத்தி, முகமூடி தயாரித்தல் போன் றவை புகழ்பெற்ற கைத்தொழில்களாகும்.

வங்கித் தொழில், கட்டடம் கட்டுதல், பெற்றோல் சுத்திகரிப்பு, மது உற்பத்தி, சிமெந்து உற்பத்தி, சீனிக் கைத்தொழில், கப்பல் வணிகம், விவசாயம் போன்ற தொழில்களும் காணப்படுகின்றன.

**சிந்தனைக்கு!**
கடமைகள் நம்முடை யவை. நிகழ்ச்சிகள் கடவுளுடையவை.



# சிறுவர் அரங்கம்

அன்புச் சிறுவர்களே!

பொங்கலை இனிமையாகக் கொண்டாடினீர் களா? உங்கள் இல்லங்களிலும் இனிமை பொங் கட்டும் சிறுவர்களே.

உங்களுக்கு ஒரு நற்செய்தி! நீங்கள் வரைந்து அனுப்பும் ஓவியங்களுக்கு பரிசுகள் வழங்கவுள்ளோம். இந்த ஓவியப்போட்டி சிலவிதி முறைகளைக் கொண்டே நடத்தப்படவுள்ளது. நீங்கள் வழமையாக உங்கள் கைவண்ணம் பகுதிக்கு அனுப்பும் ஓவியங்கள் போலல்லாமல், போட்டிக்கென நீங்கள் சிறப்பாக வரைந்து அனுப்பவேண்டும். எனவே, நீங்கள் போட்டிக்குத் தயாரா? வித்தியாசமான முறையில் உங்கள் கைவண்ணங்களை வரைந்து அனுப்புங்கள். பரிசிற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் தவிர்ந்த ஏனைய தரமான ஓவியங்கள் - உங்கள் கைவண்ணம் பகுதியில் பிரசுரிக்கப்படும். சிறப்பாக வரைந்தனுப்பி பரிசுகளை வெல்லுங்கள் சிறுவர் களே.

# விடுகதைகளும் விடைகளும்

1) செம்பு நிறைய முத்து. அது என்ன?
2) பகலிலும் வாடாது, காலையிலும் வாடாது. அது என்ன?
3) காணும்போது வாங்கமாட்டார், வாங்கும்போது காணமாட்டார். அது என்ன?
4) உருவம் ஒன்று, உள்ளம் இரண்டு. அது என்ன?
5) ஓடுவான், உலாவுவான், ஒற்றைக்காலில் நிற்பான். அவன் யார்?
6) ஏறு ஏறு சங்கிலி, இறங்கு இறங்கு சங்கிலி, எட்டாத கொப்பு எல்லாம் தட்டி வரும் சங்கிலி. அது என்ன?
7) எட்டுக்கால் ஊன்றி, இருகால் படமெடுத்து, வட்டக்குடைபிடித்து வாறாராம் வன்னியர். அவர் யார்?

## விடைகள்

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- கு.லஜந்தா
கற்கும் பாடசாலை :-
நாவற்குழி மகா வித்தியாலயம்
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், தொலைக்காட்சி பார்த்தல்,
பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :- ச.அர்ச்சன்
கற்கும் பாடசாலை :-
ஹாட்லிக் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், பத்திரிகை வாசித்தல்,
முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர் :- ம.விமல்ராஜ்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
சங்கீதம், கதை, பொது அறிவு, வாசிப்பு.

முழுப்பெயர் :- கி.அருள்ராஜ்
கற்கும் பாடசாலை :-
நாவாந்துறை றோ.க.த. வித்தியாலயம்
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல், கிரிக்கெட்.

முழுப்பெயர் :- மு.நரேன்
கற்கும் பாடசாலை :-
வல்லை சிவகுரு வித்தியாலயம்
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கதை.

முழுப்பெயர் :- ந.சங்கீதா
கற்கும் பாடசாலை :-
மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வி, விளையாட்டு, ஓவியம் வரைதல்.

முழுப்பெயர் :- வீ.குகதாஸ்
கற்கும் பாடசாலை :-
விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, ஆக்கம், முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர் :- ஆ.கஸ்தூரி
கற்கும் பாடசாலை :-
வீரசிங்கம் மகா வித்தியாலயம்
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், இசை, கணினி, கவிதை.

முழுப்பெயர் :- ம.றெக்மினோன்
கற்கும் பாடசாலை :-
இளவாலை கலைவாணி மத்திய
மகா வித்தியாலயம்
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வி, விளையாட்டு.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :............................................
கற்கும் பாடசாலை :............................................
கற்கும் தரம் :............................................
வீட்டு முகவரி :............................................
பிறந்த திகதி :............................................
ஆர்வமுள்ள துறைகள் :............................................
............................................

................ ................
திகதி ஒப்பம்

................................ ................................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



## சந்தேகம் - விளக்கம்



**தும்மல் எப்படி வருகிறது ?**

தும்மல் என்பது ஒரு தற்காப்பு தன்னிச்சைச்செயல. வேண்டாதவர் வீட்டிற்கு வந்தால் விரட்டப்படுகிறார் அல்லவா? அதேபோல நமது உடம்புக்கு உபயோகப்படாத ஒருவெளிப்பொருள். உதாரணமாக - பஞ்சு, தூசுதுணிக்கைகள், மூக்குப்பொடி போன்றவை மூக்கின் வழியே உட்செல்லும்போது விரடடியடிக்கப்படுகிறது. அதுதான் தும்மல்.

**இது எப்படி உண்டாகிறது?**

மூக்கினுள் நுழைந்த அயற்பொருள் மூக்கின் சிடேட்டுமப் படலத்தை உறுத்துகிறது. இந்தச் செய்தி மூளைக்குத் தெரிவிக்கப்படுகிறது. உடனே மூளை - அந்த அயற்பொருளை அப்புறப்படுத்து என மூக்கிற்கு ஆணையிடுகிறது. அடுத்த வினாடியே நமக்குத் தும்மல் வந்து வீடுகிறது . தும்மும்போது மூக்கின் வழியாகவும், வாய்வழியாகவும் திடீரென்று சத்தத்துடன் வெளிமூச்சு வேகமாக வெளியேறுகிறது. அப்போது நமக்கு வேண்டாத அயற்பொருட்களும் வெளியேற்றப்படுகிறது. இத்தனை செயற்பாடுகளும் நமது கட்டுப்பாட்டில் இல்லாமல் தன்னிச்சையாக நடக்கின்றது. எல்லாம் எமது நன்மைக்காகத்தான். உடலை எமது மூளை இயக்காவிட்டால், நாம் கையில் எடுக்கும் உணவை எப்படி நேராக வாய்க்குள் வைக்கமுடியும். இறைவன் படைப்பு எல்லாம் அற்புதமானவை.

## பாடி மகிழ்வோம்

மனிதரை மனிதர்
சரிநிகர் சமமாய்
மதிப்பது நம் கடமை
வள்ளுவப் பெருமான்
சொல்லிய வழியில்
வாழ்வது அறிவுடமை

உழைப்பை மதித்து
பலனைக்கொடுத்து
உலகில் போரைத்
தடுத்திடுவோம்

அண்ணன் தம்பியாய்
அனைவரும் வாழ்ந்து
அருள் விளக்கேற்றிடு-
வோம்

**வே.பார்த்திபன்**
**தரம் - 8**
**பளை மத்திய கல்லூரி**

## விண்வெளித் தகவல்

1). விண்வெளியில் பயணம் செய்த முதல் விண்வெளி வீராங்கனை - வலன்டினாதெரஸ்
2). விண்வெளியில் பயணம் செய்த முதல் விண்வெளி வீரர் - யூரிககாரின்.
3). விண்வெளிக்கு முதன் முதலாக பயணம் செய்த நாய் - லைகா
4). விண்வெளித்தம்பதிகள் - ஆன்ரியன் நிக்கலாயெவ் வாலன்டீனா தெறிஷிகோல்
5). முதல் மனிதனை விணவெளிக்கு கொணடு சென்ற விண்கலம் - யூறி பொஸ்தோக ககாரின்
5). சந்திரனில் முதன் முதல் மனிதனின்றி இறங்கிய விண்கலம் - லூனா - 9
7). முதன் முதலில் விணவெளிக்கப்பலில் சுற்றிவந்த அமரிக்கர் - தானண் எச் க்ளெண்
8). முதல் விண்வெளிப் பயணம் செய்த பெண்மணி சென்ற விண்கலம் - வேர்ஸேதாக்

**ஜெ.ஜெயசீதா**
**தரம் - 10**
**வட.மத்திய மகளிர் கல்லூரி**

## இப்படி ஒரு அதிசயம்

பெரும்பாலானோர் வலதுகையினால் எழுதுவார்கள். சிலபேர் இடது கையினாலும் எழுதுவார்கள். ஒரேநேரத்தில் இரண்டு கைகளாலும் வெவ்வேறு மொழிகளில் எழுத முடியுமா?

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜேம்ஸ் கார்பீல்ட் - ஒருகையினால் கிரேக்க மொழியையும் மற்றொரு கையினால் இலத்தீன் மொழியையும் ஒரேநேரத்தில் எழுதக்கூடியவராக இருந்தாராம்.

## உங்களுக்குத் தெரியுமா?

- உலகிலேயே மிகவும் உயரமான மிருகம் ஒட்டகச்சிவிங்கி. இது கழுத்தினைத் திருப்பாமலேயே தன் பின்புறம் உள்ளவற்றைப் பார்க்கும் திறன் இதற்கு உண்டு. நாக்கு இருந்தும்கூட, இதனால் தெளிவான சத்தத்தினை எழுப்பமுடியாது.
- ஒட்டகத்திற்கு நீந்தத் தெரியாது. தண்ணீரில் இறங்கினால் மூழ்கிவிடும்.
- பூனையின் முகத்தில் காணப்படும் மீசையின் உதவி கொண்டுதான் அது, தான் செல்லும் வழியை அறிந்துகொள்கிறது.
- நாகபாம்பு அதன் நாக்கின் மூலமே நுகர்கிறது. உறங்கும்போது மீனும், நாகபாம்பும் கண்களை மூடுவதில்லை.

## உங்கள் கைவண்ணம்



ம. கீர்த்திகன்
தரம் -6



த. ரஜிந்தன்
பளை மத்திய கல்லூரி



ப. அபிராமி
தரம் - 9
இணுவில் மத்திய கல்லூரி

# இலங்கையில் மீண்டும் யுத்தம் வெடிக்க சர்வதேச சமூகம் அனுமதிக்கமாட்டாது!

## சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தெரிவிப்பு



மீண்டும் இலங்கையில் யுத்தம் வெடிக்குமா? நாடாளுமன்றம் கலைக கப்படுமா? புதிய கட்சி அமையுமா? போன்ற கேள்விகள்தான் மக்கள் மனதில் இன்றும் எழுகின்றது. இன்னும் இரண்டு வருடங்களில் தமிழர்களுக்கான உரிமையுள்ள ஒரு தீர்வு எட்டப்படும். தமிழ்த்தேசிய இனம் சர்வதேச சட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தின் கீழ் சுய உரிமையைப் பெற்று ஓர் அரசினை அமைக்கும். இதில் எந்த வித சந்தேகமும் இல்லை. இனி மேல் சர்வதேச சமூகம் இலங்கையில் ஒரு போரினை ஏற்படுத்த அனுமதிக்கமாட்டாது.

இவ்வாறு சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தெரிவித்தார். நேற்றுமுன்தினம் - நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கோபாலரத்தினம் எழுதிய 'பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

உலகரீதியான பயங்கரவாத ஒழிப்பில் ஈடுபட்டுள்ளது அமெரிக்கா. உண்மையான பூசல்களையும், பிரச்சினைகளையும் அமெரிக்கா அணுகுகின்றது என்று யாரும் எதிர்பார்க்கக் கூடாது.

தமிழ்மக்களின் பிரச்சினை இன்று உலகமட்டத்தில் பேசப்பட்டுவருகின்றது. இந்திய உளவுத்துறையைச் சேர்ந்த சந்திரன் - இலங்கை விவகாரத்துக்குப் பொறுப்பாக இருந்தவர். பல ஆண்டுகளுக்கு முன் ஒரு முறை என்னிடம் சொன்னார் - உங்களிடம் ஒரு சிறந்த தனி அரசியல் இராணு வத் தலைவர் இல்லை என்று.

ஆனால், தற்போது அரசியல், இராணுவரீதியாக ஒரு தலைவர் உருவாகியுள்ளார். அவரின் தலைமையில் விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாகக் கொண்டு, ஒரே அணியில் தற்போது பலதரப்பும் குரல் கொடுக்கிறது.

இந்த விடயம் பதினாறு ஆண்டுகளுக்குப் பின் நிறைவேறியுள்ளது. இலங்கையிலுள்ள அரசியல் நடவடிக்கைகளுக்குப் பின்னால் இந்தியா இருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம்.

தமிழ்மக்களின் பிரச்சினையாகப் பார்க்காமல், இந்தியா விடுதலைப் புலிகளின் பிரச்சினையாகப் பார்க்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் போராட்டத்தில் மட்டுமல்ல, அரசியல் ரீதியாகவும் காய்களை அதற்கேற்ப நகர்த்துவதில் கெட்டிக்காரர். அதையே நிரூபித்துள்ளார்கள்.

தமிழீழ பகுதி ஒன்றில் நடைமுறை அரசாங்கம் இருக்கின்றது என, பிரதமர் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் சர்வதேசத்துக்கு பிரகடனப் படுத்தியுள்ளார்.

இனியும் நமது நாட்டில் யுத்தக் கதவுகள் திறக்கப்படுமாயின், தமிழ் அரசு ஒன்று நிறுவப்படும். வட - கிழக்கில் தமிழ் தரப்பில் தெரிவுசெய்யப்பட்ட 18 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 14 பேர் இந்த நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றனர் எனத் தெரிவித்தார்.



யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவும், 16 ஆவது சான்றிதழ் வழங்கலும், சிறப்பு மலர் வெளியீட்டு விழாவிலும் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பொ.இராமநாதன், கழகச் செயலாளர் வ.சிவச்சந்திரதேவன், கழகத் தலைவர் சி.குலசிங்கம் ஆகியோரைப் படத்தில் காணலாம். (116)

## லான்ட்மாஸ்ரர்-சைக்கிள் விபத்து வயோதிபர் ஒருவருக்கு காயம்!

லான்ட்மாஸ்ரர் - சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் காயமடைந்தார். நேற்றுமுன்தினம் மாலை தமது பிரார்த்தனைக் கூட்டத்தை முடித்துவிட்டு, வீடு திரும்புகையில் இந்த விபத்து இடம்பெற்றது.

7 ஆம் கட்டையடி சங்கானையைச் சேர்ந்த முருகேசு வில்பிரட் (வயது 60) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் மயக்க நிலையில், சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மல்லாகத்தில் அமைந்துள்ள அசம்பிளி ஒவ் கோட் சபைக் கூட்டத்தை முடித்துவிட்டு வீடு திரும்பும் வேளையிலேயே, மல்லாகத்தில் இந்த விபத்து இடம்பெற்றது. (121)

## கரவெட்டி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் மனையியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் நடாத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மனையியல் கண்காட்சி விழா - இன்றும், நாளையும் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு கரவெட்டிப் பிரதேசசெயலர் க.கனகரத்தினம் தலைமைதாங்கவுள்ளார். இந்த விழாவின் பிரதம விருந்தினராக இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக இ.இளங்கோவன், (பணிப்பாளர் கிராம அபிவிருத்தித் திணைக்களம் - திருகோணமலை), அ.சிவசுவாமி (பிரதேசசெயலர் பருத்தித்துறை), வி.குமாரசிங்கம் (உதவிப்பணிப்பாளர் கிராம அபிவிருத்தித் திணைக்களம் - திருகோணமலை) ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த விழாவில் கௌரவ விருந்தினர்களாக வே.வீரபத்திரபிள்ளை (உதவி பிரதேச செயலர் கரவெட்டி), மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், ஆசிரிய ஆலோசகர், கிராம அலுவலர் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர். (13)

## சிறிலங்கா நிப்பொன் புலமைப்பரிசு

## கொழும்பு, ஜப்பான் நிர்வாக உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்!

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா நிப்பொன் கல்வி கலாசார நிலைய தலைமை காரியாலய அதிகாரிகளும், நிர்வாக உறுப்பினர்களும், உத்தியோகத்தர்களும் யாழ்.மாவட்டத்தில் நிப்பொன் புலமைப்பரிசு பெற்ற மாணவ, மாணவியர்களையும், பெற்றோர், பாதுகாவலா மற்றும் அதிபர், ஆசிரியர்களையும் நேரடியாகச் சந்தித்து உரையாடவும், புதுவருடத்துக்கான அன்பளிப்புகள், நிதிகளை வழங்கவும் - தமது நிலைய செயற்பாட்டை விரிவுபடுத்துமுகமாக, நாளைமறுதினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

யாழ்.மத்திய கல்லூரி - தம்பர் மண்டபத்தில், தற்போது யாழ்.மாவட்டத்தில் புலமைப்பரிசிலுக்காக தெரிவு செய்யப்பட்ட 77 மாணவருக்கான வருடாந்த பரிசீலனைகளும் எதிர்வரும் 20 ஆம் திகதியன்று மாணவ, மாணவிகளின் கலை, கலாசார நிகழ்ச்சிகளுடன் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுடனான சந்திப்புகளும் நடைபெறவுள்ளன.

அவர்களுடன் ஜப்பானிய நிப்பொன் கல்வி கலாசார நிலைய உறுப்பினர்களும், ஜப்பானிலிருந்து யாழ்.மாவட்டத்தில் நிப்பொன் புலமைப்பரிசு பெற்ற மாணவ, மாணவியர்களை சந்திக்க வருகைதரவுள்ளனர்.

இந்த நிகழ்வில் - புலமைப்பரிசு பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு 2004 ஆம் ஆண்டுக்கான, சுமார் 3000 ரூபா பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதோடு, வேறு பல விடய நிகழ்வு, அன்பளிப்புக்களும், கல்விச் சுற்றுலா சந்தர்ப்பங்களும் கிடைக்கவுள்ளன.

இந்த நிகழ்ச்சிக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்விக் கழக உயர்நிலையாளர்களும் பங்குபற்றவுள்ளனர்.

அன்று கலை பண்பாட்டைச் சித்திரிக்கும் விதத்தில் - கலை நிகழ்வுகளை புலமைப்பரிசு பெறும் மாணவ, மாணவியர் நிகழ்த்திக் காட்டவுள்ளனர்.

## தமிழீழ நீதிமன்றால் இதுவரை 24 ஆயிரம் வழக்குகள் தீர்ப்பு!

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இயங்கி வரும் தமிழீழ நீதிமன்றங்களின் மூலமாக, இதுவரை 24 ஆயிரம் வழங்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதாக, நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் இ.பரராஜசிங்கம் தெரிவித்தார்.

தமிழீழ நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை ஆட்சேபித்து இதுவரை 800 மேன்முறையீடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும், அவற்றில் 500 மேன்முறையீடுகளுக்குத் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தேசிய, சர்வதேச சட்டங்களுடன் பெரும்பாலும் ஒத்துப்போகக் கூடிய விதத்தில் - தனியான சட்டவாக்கத்தினையும் புலிகள் கொண்டுள்ளதாகவும் நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் கூறினார்.

பாலியல் வல்லுறவு, கொலை, போதைவஸ்து பாவனை, பாலியல் துன்புறுத்தல் ஆகிய 4 குற்றங்களும் பாரிய குற்றங்களாகப் புலிகள் இயக்கத்தின் சட்டக்கோவையிலுள்ள 14 சட்டப் பிரிவுகளில் கருதப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற அனைத்து இனங்களுக்கும் பொதுவானதாகவே புலிகளின் சட்டவாக்கம் அமைந்துள்ளது என்றும், முஸ்லிம்களின் மார்க்கரீதியிலான வழக்குகள் - புலிகளின் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறான வழக்குகள் தாக்கல் செய்யப்படும்பட்சத்தில், இஸ்லாமிய ஷரியத் சட்டங்களின் அடிப்படையில் தீர்ப்புக்கள் வழங்கப்படும் எனவும் பரராஜசிங்கம் மேலும் தெரிவித்தார்.



நேற்று நடைபெற்ற கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் நினைவுதினத்தில் யாழ்.மாநகர முன்றலில் இருந்து ஆரம்பமான ஊர்வலத்தில் பாடசாலை மாணவிகள் மாவீரர்களின் திருவுருவப் படத்தைத் தாங்கிச் செல்வதைப் படத்தில் காணலாம். (111)

## ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்படிப்பிற்கான பயிற்சியைப் பெறுவதற்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் பரீட்சை - எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

450 வரையான ஆசிரியர்கள் பங்குகொள்ளும் இந்தப் பரீட்சையானது, அன்றையதினம் காலை 10 மணிக்கு இடம்பெறுமென யாழ். வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ப)

## குறிகட்டுவான் – யாழ்ப்பாணம் பேருந்து சேவையில் மாற்றமில்லை

### பயணிகள் பெரும் சிரமம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கும் குறிகட்டுவானுக்கும் இடையில் பயணிகள் படகு சேவை நேரங்கள் - இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளபோதும், அதற்கேற்ப யாழ் - குறிகட்டுவான், குறிகட்டுவான் - யாழ்ப்பாணம் இடையிலான வடபிராந்திய போக்குவரத்து சபையினரின் பேருந்து சேவை நேரங்களில் எந்தவித மாற்றங்களும் செய்யாமையினால், பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத் தீர்மானத்தின் பிரகாரமே, படகுசேவை நேர மாற்றங்கள் செய்யப்பட்டது. ஆனால், அதேபோன்று பஸ்சேவையும் மாற்றப்படாமையினால், பயணிகள் - தனியார் பஸ்சேவையினை நம்பியே தங்கள் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

தற்போது குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கான மாலை நேர படகுசேவை 4.30 மணிக்கே ஆரம்பமாகின்றபோதும், போக்குவரத்து சபை பேருந்து மூலம் யாழ். பஸ்நிலையத்தில் பகல் 1.30 மணிக்கு புறப்பட்டு குறிகட்டுவானை அடைந்து, 2 மணிநேரத்திற்கும் மேலாக துறைமுகத்தில் தங்கியிருக்கவேண்டும்.

எனவே, உரிய அதிகாரிகள் இதில் கூடியகவனத்தை எடுத்து, வடபிராந்திய போக்குவரத்து சபையின் பேருந்து சேவை நேரமாற்றங்களை மேற்கொண்டு, பயணிகளின் சீரான பயணத்திற்கு வழிசமைக்க வேண்டுமென மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## சம்பந்தன் விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சம்பந்தன் விருது வழங்கும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவாக வழங்கப்படும் 'சம்பந்தன் விருது' இம்முறை மூதறிஞர் சு.வேலுப்பிள்ளைக்கு வழங்கப்படவுள்ளது. 'சு.வே சிறுகதைகள்' எனும் சிறுகதைத் தொகுதிக்காகவே இவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

இந்த விருது வழங்கும் நிகழ்வு - நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், வாழ்த்துரைகளை - வரதர், ஆசிரிய மணி அ.பஞ்சாட்சரம், மூதறிஞர் சொக்கன் ஆகியோரும், நன்றியுரையை செங்கை ஆழியானும் நிகழ்த்துவர். (ச)

வாரநோக்கு

- யாழவன்

# முடிவுகள் எட்டப்படாமலேயே தொடருகின்ற சந்திப்புக்கள்!



வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளை சந்திக்கும் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால.

**தை** பிறந்திருக்கிறது. தமிழருக்கு வழி பிறக்குமோ எனும் வினாவை பல தரப்பினர் மத்தியிலும் ஏற்படுத்திவிட்டு கடந்தவருடம் கடந்துசென்று இருக்கிறது. ஆண்டுகள் முடிவதும் புதிய ஆண்டுகள் தொடங்குவதும் மிக விரைவாக நடந்துமுடிவது போலத் தெரிகிறது. ஆனால், நிறுத்திவைக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் எப்போது இனி மீண்டும் ஆரம்பமாகும் என்பதும் இன்னும் வினாக் குறியாகவே இருக்கிறது.

இருபது வருடங்களுக்கு மேலான போரியல் வரலாற்றில் என்றுமேயில்லாத ஒரு வியப்பினை ஏற்படுத்திக் கடந்த தை பிறந்திருந்தது. பரம எதிரிகளான சிறிலங்கா இராணுவத்தினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒருவரோடு ஒருவர் கைகுலுக்கிக்கொண்டனர். இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளும் தமது அரசியற் பணிமனைகளைத் திறந்த விடுதலைப் புலிகள் மக்கள் சேவையை ஆற்றி வருகின்றனர்.

களத்திலே எதிரியாகச் சந்தித்துத் துப்பாக்கிகளால் பேசிக்கொண்ட இராணுவத் தளபதிகளும், விடுதலைப் புலிகளின் தளபதிகளும் கடந்த தைபிறந்தபோது கைலாகு கொடுத்துக் கதைத்துப் பேசினர். அந்த நிகழ்வுகளை ஆச்சரியத்தோடும் ஆதங்கத்தோடும் பார்த்த பொதுமக்கள் - இந்தத் தையோடு தமக்கு வழி பிறக்குமென நம்பிக் கொண்டிருந்தனர். ஆனால், அடுத்த தை வருவதற்கிடையில் அந்த நம்பிக்கை குறைந்து போய் விட்டது.

அதிகாரப் போட்டிகள், கட்சி நலன்கள், வரட்டுக் கௌரவங்கள் எனும் குறுகிய வட்டத்திற்குள்ளே கட்டுண்டுபோயுள்ள தென்னிலங்கை அரசியல்வாதிகள் சமாதான நடவடிக்கைகளை பகடைக்காய்களாகப் பாவித்துத் தமது அரசியற் சூதாட்டத்தைத் தொடர்ந்த வண்ணமுள்ளனர்.

எங்கே இன்னுமோர் கொடிய போர் தொடங்கிவிடுமோ எனும் அச்சம் இன்று மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. அண்மைக் காலத்தில் நடைபெற்ற சில அரசியற் தாக்கங்களே இவ்வாறான சந்தேகத்தை அவர்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளன. ஆனாலும், இடைக்கிடை நம்பிக்கைகள் துளிர்ந்தவண்ணம்தான் உள்ளன.

புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் தூது போகவேண்டிய தேவையை புறந்தள்ளக்கூடிய வித்ததிலே ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் தூதுபோகவேண்டியதேவை அமைந்துள்ளது. பல தடவை சந்திப்புக்கள் பல தரப்புக்களிடையேயும் நடைபெற்ற வண்ணமிருக்கின்றன. ஆனாலும், பேச்சுவார்த்தை மேசையிலே புலிகளும் அரசும் மீண்டும் சந்திக்கும் போதுதான் தேய்ந்துபோன சமாதானம் மீதான மக்களின் நம்பிக்கை வலுப்பெறத்தொடங்கும்.

சந்திப்புக்கள் என்பது சமாதானத்திற்கான தற்போதைய காலத்திலே மலிந்து போய்விட்டன. வெளிநாட்டுத் தூதுவர்களும், பிரதிநிதிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் எனப் பலர் இலங்கைக்கு வருகிறார்கள். இங்குள்ள்வர்களோடு சந்தித்துப் பேசுகிறார்கள்.

இங்குள்ளவர்களும் தமக்கிடையே பல தடவைகள் சந்தித்துப் பேசுகிறார்கள். ஆனால், தொடரும் சந்திப்புக்களில் உறுதிமொழிகள்தான் வழங்கப்படுகின்றனவே தவிர உருப்படியான காரியங்கள் எதுவும் நடைபெறவில்லை. சந்திப்புக்கள் என்ற விதத்தில், குடாநாட்டின் அரசியற், சமூக தளத்தில் கடந்த வாரமும் முக்கிய சில சந்திப்புக்கள் நடைபெற்றுள்ளன.

அவற்றுள் முக்கியமானது, குடாநாட்டின் புதிய இராணுவத் தளபதி சுசில் சந்திரபாலாவும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசிக்கொண்டதாகும். பதவியேற்றவுடன் தளபதி சந்திக்கும் முதற் பிரதிநிதிகள புலிகளாகவே இருப்பார்கள் என்று கருதப்பட்டபோதும், பொதுமக்கள் பிரதிநிதிகள், போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடிய பிற்பாடு கடந்த வெள்ளிக்கிழமை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தக் கலந்துரையாடலைப் படம்பிடிப்பதற்குக்கூட பத்திரிகையாளர்கள் எவரும் கண்காணிப்புக் குழுவினரால் அனுமதிக்கப்படவில்லை. இருமணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது பல முக்கிய விடயங்கள் தொடர்பாக காரசாரமாக விவாதிக்கப்பட்டுள்ளது.

புலிகளால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என சுசில் சந்திரபாலாவால் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பாக நீண்ட நேரம் பேசப்பட்டுள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட யாழ். மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன்- 'இந்த விடயம் தொடர்பாக இராணுவத்தினர் எம்மை கேட்டார்கள். நாங்கள் அவர்களுக்குத் தெளிவாக, எமது நிலைப்பாட்டைச் சொன்னோம். அவர்களுக்கும் தெளிவு ஏற்பட்டுள்ளதாக உணர்கிறோம்'' எனத் தெரிவித்தார்.

புலிகளோடு நெருங்கிய நட்புறவைப் பேணி அரசியல் நிலைப்பாடுகளை அவதானமாகக் கையாள்வார் என மக்கள் சந்திரபால மீது நம்பிக்கை கொண்டபோதும், புலிகள் தன்னைக் கொல்லத் திட்டமிடுவதாகத் தெரிவித்து சந்திரபால 'கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்தமையானது அதிர்ச்சியான விடயமாகவேயுள்ளது.

இந்தச் சந்திப்பின்போதும் பல கோரிக்கைகள் புலிகள் தரப்பால் விடுக்கப்பட்டன. அவையும் வழமையான பாணியிலே படை மற்றும் பொலிஸ் தரப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உறுதிமொழிகளும் வழங்கப்பட்டன. ஆனால், அவை நிறைவேற்றப்படுமா என்பது ஐயமாகவேயுள்ளது.

புலிகளுடனான சந்திப்பு நடைபெற்று மூன்று நாட்களுக்குப் பின்னர், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினரையும் சந்திரபால சந்தித்துப் பேசியுள்ளார். இதன்போதும் பல கோரிக்கைகள் படைத்தரப்பிடம் விடுக்கப்பட்டுள்ளன. அவையும்கூட சமயோசிதமான முறையிலே படைத்தரப்பால் கையாளப்பட்டுள்ளன.

மோதகமும் கொழுக்கட்டையும் போல உள்ளுடன் ஒன்று. வடிவந்தான் வேறு என்பதாக - யார் யார் படையினரைச் சந்தித்தாலும் ஒரேவிதமான கோரிக்கையையே திரும்பத் திரும்ப விடுத்தவண்ணம் உள்ளனர். உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், அதற்குள் அமைந்துள்ள பொதுமக்களின் வீடுகள், பொதுக் கட்டடங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் என்பவற்றை விடுவித்தல், முக்கியமான வீதிகளைத் திருத்துதல், ஹோட்டல்களை விட்டு இராணுவத்தினர் வெளியேறுதல் என நீளும் கோரிக்கைப் பட்டியல்களிலே ஏ - 9 நெடுஞ்சாலையைத் திறக்கும் நேரத்தை அதிகரிப்பதும் தற்போது இணைக்கப்பட்டுள்ளது.

ஏ - 9 நெடுஞ்சாலையின் திறப்பு நேரத்தை அதிகரிக்கும்படி விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இராணுவத்தினர், ஏ - 9 வீதியை 24 மணிநேரமும் திறந்துவைக்கத் தயாராகவுள்ளதாகவும், ஆனால், சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவினரே அதற்கு ஒத்துவராதுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இந்தக் கூற்றை ஏற்றுக்கொள்ள பொதுமக்கள் தயாராகவிருப்பார்களா என்பது கேள்விக்குறியே.

பண்டிகைக் காலமான நத்தார் தினத்தன்று பாதையை ஓரிரு மணித்தியாலங்கள் மேலதிகமாகத் திறக்க மறுத்த படைத்தரப்பு எவ்வாறு தினமும் 24 மணிநேரமும் திறக்கச் சம்மதிக்கும் என சந்தேகிக்கவேண்டிய நிலையும் உள்ளது.

நத்தார் தினத்தன்று புலிகள் தமது காவலரண்களை இரவு 10 மணிவரை திறந்து வைத்தபோதும் படையினரோ 6 மணியுடனேயே மூடிக்கொண்டார்கள். அதனால், பல பயணிகள் நாய்படாதபாடுபட்டதை மறந்துவிடமுடியாது.

ஏ - 9 வீதியை 24 மணிநேரமும் திறந்து வைக்கவேண்டிய அவசியம் நிறையவேயுள்ளது.

அபரிதமான நிலையில் உள்ள வன்னிப் பெருநிலப்பரப்பு நோயாளிகளை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவருவதற்கும் மரணச் சடங்குகளில் கலந்துகொள்பவர்கள் தயக்கமின்றி உடன் வருவதற்கும் ஏ - 9 நெடுஞ்சாலையை முழுநாளும் திறந்துவைக்கவேண்டியது அவசியமானதாகும். இதனை முத் தரப்பினரும் உணர்ந்து கொள்ளவேண்டும். புலிகள், படையினர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஆகியோரே இந்த முத்தரப்பினர்களும் ஆவார்கள்.

இவர்களுள் முதற் தரப்பினராகக் குறிப்பிடப்பட்டுள்ள புலிகள், இது தொடர்பாக பல மாதங்களுக்கு முன்னரேயே தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்திவிட்டார்கள். இரவு பகல் என முழுநாளும் தமது நிலைகளைத் திறந்திருக்கச் சம்மதம் தெரிவித்தார்கள்.

தற்போது படைத்தரப்பும் அது விடயமாக சாதகமான பதிலைத் தெரிவித்துள்ளது. இனி மூன்றாம் தரப்பான சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரின் நிலைப்பாடே வெளிவரவேண்டியுள்ளது.

போரின்போது வந்துநின்று உயிர்களைக் காப்பதும், பிரிந்துபோன உறவுகளை மீளச் சேர்ப்பதும் தமது கடமைகள் எனத் தெரிவித்து பணியாற்றிவரும் சர்வதேச செஞ்சிலுவைக் குழு ஏன் இந்த விடயம் தொடர்பாக பின்னிற்கிறது என்பது இதுவரை புரியாத விடயமாகவேயுள்ளது.

ஊழியர்கள் இரவு பகலாக கடமையாற்றத் தயாரில்லை எனவும் கூறமுடியாது. ஏனெனில், களப் பணியினையே தமது நோக்கமாகக் கொண்டு இயங்கிவரும் செஞ்சிலுவைச் சங்கத்திலே பணிபுரிபவர்கள். காலம் நேரம் பாராது பணியாற்றவேண்டியது அவசியமானது தானே. எனவே, பாதை திறப்புக்கு மட்டும் ஏன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பாராமுகமாக நிற்கின்றது. போரின்போது மட்டும்தான் காலநேரம் பாராது கடமையாற்றவேண்டும் எனும் நியதிகள் ஏதேனும் உண்டோ தெரியவில்லை.

இதைவிட அடிக்கடி எல்லோராலும் பேசப்படும் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கும் படைத்தளபதி கடந்த சந்திப்பில் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். பாதுகாப்பு வலயங்களைக் குறைப்பதோ அல்லது அகற்றுவதோ பிராந்தியத் தளபதிகளின் கைகளில் இல்லையென்ற உண்மையை காலங்கடந்து வெளிப்படுத்தியுள்ளனர்.

இராணுவத்தினருக்கு கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கும், சிற்சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மட்டுமே பிராந்தியத் தளபதிகளுக்கு அதிகாரம் உண்டு.

பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக அவர்களால் பேசமுடியுமே தவிர எதையும் செய்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லை. வேண்டுமாக இருந்தால் 'உத்தரவின்றி உட்பிரவேசிப்பவர்கள் மீது குறைந்த பட்ச தண்டனை வழங்கப்படும்' என எழுதிவைக்க அவர்களால் முடியும்.

குறைந்தபட்சத் தண்டனை எதுவென ஆராயமுற்பட்ட ஊடகவியலாளர் ஒருவர் அடிகளும் உதைகளும் வாங்கி மீண்டசம்பவம் ஒன்று இங்கு நினைவூட்டத் தக்கது. இந்த உத்தரவின்றி என்ற பதத்தைக் கண்ட வயோதிபர் ஒருவர் - 'எனது வீட்டில் எனது அனுமதியின்றி இருப்பவன் எழுதிப்போட்டிருக்கின்றான்- நான் தனது உத்தரவின்றி உட்பிரவேசிக்கக்கூடாது என, இது உலகில் எந்தவகை ஜனநாயகச் சட்டத்தினுள் அடக்கப்படுகிறதோ தெரியவில்லை' என்று கூறினார். அவரது ஆதங்கத்திலும் அர்த்தமில்லாமல் இல்லை.

அதிகார வலுவற்ற பிராந்தியத் தளபதிகள் எதற்காகப் பொதுமக்களைச் சந்திக்க வேண்டும். கவனமாக அவர்களது கருத்துக்களைச் செவிமடுப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டும். மக்களை ஏமாற்ற எத்தனிக்கிறார்களா? அல்லது தமது மரியாதையையும், இல்லாத அதிகாரத்தையும் காட்டமுற்படுகிறார்களா என்பதுதான் எமக்குப் புரியவில்லை.

அதிகாரமற்ற பிரதமர் சமாதானப் பேச்சுக்களில் இருந்து ஒதுங்கிக்கொண்டதுபோல இவர்களும் ஒதுங்கிக்கொள்வது பிரயோசனமான விடயமாக இருக்கும். அதைவிடுத்து வாரந்தோறும் சந்திப்புக்களை மேற்கொள்வதும், உறுதிமொழிகளை வழங்குவதும், அவை நிறைவேற்றப்படாமலேயே அடுத்த சந்திப்புக்களை மேற்கொள்வதும் அர்த்தமற்ற விடயமேயாகும்.

இன்று இலங்கையில் அரசியல் தளத்திலே நடைபெறும் பெரும்பாலான சந்திப்புக்கள் முடிவுகள் எதுவும் எட்டப்படாமலேயே தொடர்ந்தவண்ணம் உள்ளன. இவற்றால் என்ன நன்மை கிட்டப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இந்த நிலையில், சுவீடன் நாடாளுமன்றக் குழுவும் அரச அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது - அபிவிருத்தி நோக்கிய செயற்பாட்டில் தமது பங்களிப்பைச் சுவீடன் வழங்குவதே இந்தச் சந்திப்பின் நோக்கமாக இருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

முடிவுறாச் சந்திப்புக்கள், முடிவுகள் எட்டப்படாமலேயே தொடரத்தான் போகின்றனவா?

கடந்த வாரம் தைப்பொங்கல் தினம் வந்தமையால், குடாநாடு முழுவதும் வெடியோசைகளுக்கு குறைவில்லாமல் இருந்தது உண்மை. வெடிகளின் ஓசைகளைக் கேட்டே பழக்கப்பட்ட எமது மக்கள் சமாதானத்திற்கான இரு வருட இடைவெளிகளுக்குப் பின் சமாதான



வெடிகளின் ஓசைகளுக்கே காதைப் பொத்திக் கொள்கிறார்கள். இனியொரு போர் ஏற்பட்டால், நிலை என்னவாக விருக்கும்.

அண்மைக் காலங்களில் வடக்கிலும் கிழக்கிலும் பல கொலைச் சம்பவங்கள் அதிர்ச்சியூட்டும் வகையில் நடந்தேறியுள்ளன.

மிக அண்மையில் இளம்பெண் ஒருவருடையது எனச் சந்தேகிக்கப்படும் எலும்புக் கூடும் அதனுடன் சில உடைகளும் சைக்கிள் உதிரிப் பாகங்களும் கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் மலக்குழியில் இருந்து மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

புதைகுழிகளும், கொலைகளும் யாழ்ப்பாணத்திற்கு மட்டுமல்லாது, தாயகப் பிரதேசம் முழுவதற்குமே எழுதப்பட்ட விதியா என மனம் நோகின்றது. மூன்று, நான்கு வருடங்களுக்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து இலங்கை மனித உரிமைகள் தொடர்பாக ஆராய்வதற்காக குழுவொன்று வந்திருந்தது.

அது யாழ்ப்பாணத்திலே - ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியிலே ஒரு கருத்துக் கணிப்பையும் நடத்தியிருந்தது. அப்போது ஆசிரியர் ஒருவர் கூறினாராம், "யாழ்ப்பாணத்தில் மனித உரிமை பற்றி ஆராய வேண்டுமாக இருந்தால், எழுந்தமானதாகச் சில இடங்களை தோண்டிப் பாருங்கள்" என்று. அவரது கருத்தின் ஆழம் சிந்திக்கவல்லது.

கடந்தவாரம் தொடரும் சந்திப்புக்களையும் நீளும் கொலைப் பட்டியலையும் நினைவுபடுத்துவதாக அமைந்துமுடிந்திருக்கிறது. அடுத்த வாரமாவது அமைதியாகக் கழியுமா? என்பதை இன்றே எதிர்வுகூறமுடியாத நிலையிலேயே நாடு சென்றுகொண்டிருக்கிறது. ☆

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*குணன்இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனன்இலனாம் ஏமாப்பு உடைத்து*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### சமாதானத்தை முன்னெடுப்போர் யார் ?

இந்தியாவுக்கு மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ஹேரத் தலைமையிலான மூன்று உறுப்பினரைக் கொண்ட சிறிலங்காவின் உயர்மட்டப்பாதுகாப்பு அதிகாரிகள் குழுவானது, இந்திய அதிகாரிகளுடன் பரஸ்பர இராணுவப் பயிற்சி தொடர்பான விடயங்கள், இருதரப்பு பாதுகாப்பு குறித்த பிரச்சினைகள், சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள், பாதுகாப்பு நட்புறவு ஒப்பந்தம் ஆகியன குறித்து பேச்சு நடத்தி வருகின்ற இவ்வேளையில் கொழும்பில் அரசியல் நெருக்கடிகள் மேலும் தீவிரமடைந்து வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

இராணுவப் பலத்தையும், நலத்தையும் பேணவும் சர்வதேச நாடுகளுடன் பாதுகாப்பு உடன்பாடுகளை மேற்கொள்ளவும், சிறிலங்கா காட்டிவரும் தீவிர ஆர்வமானது சந்திரிகா பாதுகாப்பு அமைச்சை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்ட பின்னர் வேகம்கொள்ளத் தொடங்கியிருப்பது குறிப்பிட்டுக் கவனிக்கப்படவேண்டியதொன்றாகும்.

தனது அரசியல் அதிரடி நடவடிக்கைகள் காரணமாக சமாதான முயற்சிகள் யாவும் தேக்கமடைந்து அதன் எதிர்காலம் குறித்த நம்பகத்தன்மையானது சிதைந்து கொண்டிருக்கும் நிலையில் சர்வதேச சமாதான ஆர்வலர்களின் அறிவுறுத்தல்கள், அழுத்தங்கள் அனைத்தையும் புறக்கணித்து விட்டு, மீண்டும் யுத்தபீதியை உருவாக்கும் முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா ஈடுபடத்தொடங்கியுள்ளார் என்ற பொதுமக்களின் சந்தேகங்களை உறுதிப்படுத்துபவர் ஆகவே அவரின் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் யாவும் நடந்தேறி வருகின்றன.

நாட்டின் இன்றைய தேவை இரண்டாண்டு நீடித்தபோர் நிறுத்தமும், புரிந்துணர்வு உடன்பாட்டின் தொடர்ந்த கடைப்பிடிப்பும் மேலும் நம்பிக்கையுடன் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, அரசியல் குழப்பங்களால் நின்று போன சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் ஆரம்பித்து, நியாயபூர்வமானதும், உறுதியானதுமான இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றை எட்டும் வரையில் தொடர்வதேயாகும்.

இதையே இனவாதிகளல்லாத பொதுமக்களும், சுயநல அரசியல் அபிலாஷைகளுக்கு அப்பால், ஆத்மார்த்தமாகவே சிறிலங்காவில் சமாதானத்தை உறுதியாக ஏற்படுத்தவே சர்வதேச நாடுகளும் விரும்புகின்றன.

ஆனால், சந்திரிகாவும் தற்சமயம் அவருக்கு "உருவேற்றி" பிற்பாட்டுபாடிநிற்கும் பௌத்த சிங்கள பேரினவாதம், பேசும் சக்திகளும் ஏனைய தேச விரோதக்கும்பல்களும், தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான நகர்வுகளை விரும்பாத சில உள்ளக மற்றும் வெளியக சக்திகளும், இதற்கு எதிரானதும், முரணானதுமான செயல்களிலேயே முனைப்புடன் இயங்கிவருகின்றன.

சமாதான மற்றும் போர்நிறுத்தம் ஆகிய தமது தேசிய மற்றும் பிராந்திய அரசியல் அபிலாஷைகளுக்கு ஆபத்தானது என்றே அவைகள் கருதுகின்றதே இதற்குக் காரணமாகும்.

இவர்கள் சமாதானத்தை ரணிலோ, விடுதலைப்புலிகளோ, அல்லது அதனை முன்னெடுக்க முயன்று செயற்பட்டுவரும் நோர்வே அரசாங்கமோ, அதன் பின்னணியில் உள்ள சர்வதேச நாடுகளோ, ஏற்படுத்தி விடக்கூடாது என்பதிலும் வெகு கவனமாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இன்னும் தெளிவாகச் சொல்வதானால் - இவர்கள் அனைவரும் சந்திரிகாவின் சமாதானத்திற்கான யுத்தம் என்ற விசித்திரமானதும், விவேகமற்றதுமான தத்துவத்திற்கு ஆதரவானவர்கள் என்று கூடக்கூறலாம்.

ஆனாலும், இவர்களும் அவ்வப் போது சமாதானம் என்ற சொல்லை தமது தேவைகளுக்கேற்ப பாவிப்பதும் -அதாவது உச்சரிப்பதும் உண்டு.

அவ்வளவுதான்.

இப்போது இந்தியாவில் மேற்கொள்ளும் பேச்சுக்களின் அவசரதேவை சமாதான முயற்சிகளுக்கு அவசியமானவையே அல்ல. மாறாக ஏதோவகையில் அதற்கு அச்சுறுத்தலானவையே ஆகும்.

சந்திரிகாவின் இந்த அணுகுமுறை ரணிலை மிரட்டவா அல்லது விடுதலைப்புலிகளை அச்சுறுத்தவா அல்லது சமாதானத்தை வலியுறுத்த அரசியல் நெருக்கடிகளுக்கு விரைந்து தீர்வுகாணும்மாறு வலியுறுத்தும் சர்வதேச சமூகத்தை குறிப்பாக அமெரிக்காவை - அவமதிக்கவா என விவாதிக்கவேண்டிய அவசியமே இல்லை.

அதற்குள் எல்லாமே அடக்கம் என்பது அரசியல்நோக்கர்களின் கருத்தாகும்.

இந்த நிலையில் லண்டனில் தன்னைச் சந்தித்துப் பேசிய நோர்வேயின் விஷேடதூதுவர் எரிக்சொல்ஹெய்மிடம் விடுதலைப்புலிகளின் அரசியல் மதியுரைஞரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன்பாலசிங்கம் கூறியகருத்துக்களும் வழங்கியுள்ள உத்தரவாதமும் சர்வதேச சமாதான ஆர்வலர்களுக்கு நம்பிக்கையூட்டும் விடயங்களேயாகும்.

கொழும்பில் தற்போது நிலவும் அரசியல்குழப்பங்களும், நெருக்கங்களும் தீர்ந்து சமாதானப்பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பிக்க, மக்களின் ஆணையைப் பெற்ற வலுவான அதிகாரங்களைக் கொண்ட அரசொன்று தயாராகும் வரை நாம் போர்நிறுத்தத்தையும், பரிந்துணர்வு உடன்பாட்டின் விதிகளையும் தொடர்ந்து கடைப்பிடிப்போம். அந்த நாள்வரை காத்திருப்போம். என்ற தொனியில் அவர்கூறியிருப்பது சமாதானத்தில் உண்மையான விசுவாசத்துடன் யார் செயற்படுகின்றார்கள் என்பதை உலகிற்கும், தென்னிலங்கைச் சமாதானம் விரும்பும் மக்களுக்கும் தெளிவாகவே உணர்த்தியிருக்கும்.

தென்னிலங்கை மக்கள் தாம் யாருக்கும் சமாதானத்தை முன்னெடுக்கும் அதிகாரத்தையும், ஆணையையும் முழுமையாக வழங்கியிருக்கிறார்கள். என்பதை உறுதிப்படுத்தி ஓங்கி குரலெழுப்பவேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

மக்கள் யாரை தமது பிரதிநிதியாக சமாதானத்தை முன்னெடுக்க தெரிவுசெய்யப்போகிறார்கள். பிரதமரையா, ஜனாதிபதியையா...?

காலம்தான் பதில்சொல்லவேண்டும்.

## நாடும் நடப்பும்

...?




## காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம்

# சுதந்திரதினத்தன்று செயலகம்முன் மறியற் போராட்டம் நடத்த முடிவு!

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் - பெற்றோர் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியினரும் இணைந்து சுதந்திரதினத்தன்று யாழ். செயலகத்திற்கு முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இலங்கை சுதந்திரமடைந்தும், எமது பிரதேசத்தில் எமக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை, எமது பிள்ளைகள் பலர் காணாமற்போயுள்ளனர். அவர்களின் நிலைமகள் தொடர்பாக இறுதி முடிவுகள் எவையும் எமக்குக் கிடைக்கவில்லை. எனவே, எமது சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலையில், யாழ். செயலகத்தில் தேசியக்கொடி ஏற்றப்படவேண்டுமா? எனக் கோரி, தேசியக் கொடி ஏற்றப்படுவதினைக் கண்டித்தும் காணாமற்போனோர்- பெற்றோர் பாதுகாவலர் சங்கம் தலையில் கறுப்புத் துணிகளைப்போட்டு, பெப்ரவரி 4 ஆம் திகதி மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக காணாமற்போனோர்- பெற்றோர் பாதுகாவலர் சங்கச் செயலர் தெரிவித்தார். (01)

# இந்தியாவின் துரோகத்தனத்திற்கு இரையானவர்தான் கேணல் கிட்டு

## யாழ்.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துவாழும் தமிழ் மக்களின் சிந்தனையை, உழைப்பை தமிழீழம் நோக்கித் திருப்பிவிட்டு, சமாதானத்திட்ட வரைபுகளுடன் தாயகம் நோக்கிப்புறப்பட்ட வேளை, இந்தியாவின் துரோக்கத்தனதுக்கு இரையானவர்தான் மூத்த தளபதி கேணல் கிட்டு எனத் தெரிவித்தார் யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன். நேற்றுக் காலை கிட்டுபூங்காவில் இடம்பெற்ற கிட்டு நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

சமூக சீர்கேடுகளை ஒழிப்பதற்குத் தானும் ஒருவனாக சமூகத்தோடு மிகவும் ஆழமாக இணைந்து செயற்பட்டார். ஆளும் காலங்களில் பெரிதும் அறியப்படாத காலகட்டத்தில் பல ஆய்வுகள், பல அமைப்புகள் இயங்கியவேளை விடுதலைப் புலிகள் யார்? என்பதை நிரூபித்துக்காட்டினார். தனது எழுத்து, பேச்சாற்றல் மூலம் போராட்ட நியாயப்பாட்டை சகல மக்களும் அறியும் வகையில் வெளிப்படுத்தி, அதன் மூலம் மாபெரும் மக்கள் படையைத் திரட்டினார்.

எங்களுக்கென ஒரு கட்டுப்பாட்டுப்பிரதேசம், அதனூடாக மக்களுக்கென ஒரு கட்டுமானம் ஏற்படுத்தினார். யாழ்ப்பாணம் 1985 இன் இறுதிகளில் எமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டபோது பல அமைப்புகள் மூலம் பேராட்டத்தை மக்கள் மயப்படுத்தினார். பல்வேறு அமைப்புகளுடன் தனது தொடர்பைப் பேணினார். இதன்மூலம் சமாதான வழியில் முழுமையான, நிரந்தரமான தீர்வு ஒன்றை எவ்வாறெல்லாம் பெறமுடியுமோ அதற்காகத் தயாராக இருந்தவர்தான் தளபதி கேணல் கிட்டு என அவர்மேலும் தெரிவித்தார்.

முன்னதாக மாவீரரின் உருவப்படம் மாநகரசபை முன்றலிலிருந்து பான்ட் வாத்திய அணிவகுப்புடன் எடுத்துவரப்பட்டது. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், நல்லூர் கோட்டப்பொறுப்பாளர் பொ.ஈஸ் வரன், மகளிர் பொறுப்பாளர் பூமகள் உட்பட போராளிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (111)

# இலங்கை – அமெரிக்கா இணைந்து வாத்தக சபை அமைக்கவுள்ளது

இந்த வர்த்தக சபையை அமைப்பதில் அமெரிக்கா முக்கிய பங்கு வகிக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களை அமைக்கும் நோக்குடனேயே இவ்வர்த்தக சபை அமைக்கப்படுவதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாசியப் பிராந்தியத்தில் சர்வதேச வர்த்தகத்தினை மேற்கொள்ள அரசு நல்லதொரு மையமாக இருக்கும் எனவும் அமெரிக்கத் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனோ – மலிக் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான மனோ தித்தவெல - மலிக் சமரவிக்கிரம குழுவினரின் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தற்போது லண்டனில் தங்கியிருக்கும் ஜனாதிபதியின் ஆலோசகரும், இணக்கப்பாட்டுக் குழுவின் ஜனாதிபதி தரப்புப் பிரதிநிதியுமான மனோ தித்தவெல - நாடு திரும்பியதும் இந்தப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மனோ தித்தவெல - மலிக் சமரவிக்கிரம குழுவினரின் பேச்சுவார்த்தைகளின்போது எட்டப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதி செயற்படத் தவறியதால், மீண்டும் இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்வதில் அர்த்தமில்லை என அண்மையில் அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

இருவருக்கும் இடையில் இணக்கப்போடு ஏற்படுத்தப்பட வேண்டும் என வர்த்தக சமூத்தினர் கொடுத்து வரும் அழுத்தங்களையடுத்தே, மீண்டும் மனோ தித்தவெல - மலிக் சமரவிக்கிரம குழுவினரின் பேச்சுவார்த்தைகளை நடத்துவது என்று உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

# உங்களின் புத்தாண்டு யோகம் எப்படி?



## மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

எல்லோருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

மேலான செயற்திறனும், உழைப்பின் மீது உயர்ந்த நம்பிக்கையுமுடைய மேடராசி நேயர்களே!

வேகமும் விவேகமுங்கொண்ட நீங்கள்- எல்லாக் கருமங்களையும் திட்டமிட்டுச் செயற்படுவீர்கள். சகலருடனும் ஒற்றுமையாக இருந்து, நல்வாழ்க்கை வாழமுடியும். பொருளாதாரம் சிறப்படையும். உடல் நலத்தைப் பேணிக் கொள்வது நன்று. 28.08.2004வரை குரு 5 ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், மிகவும் நன்மையான பலன்களையே தரும். குருவின் பார்வையால் பலவித சிறப்புக்கள் ஏற்பட இடமுண்டு. தொழில் முயற்சியும், புத்துணர்ச்சியும் தென்படும். 28.08.2004 முதல் குருபகவான் 6 ஆம் வீட்டுக்கு வருவதால் பல பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு. எதற்கும் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுவது நன்று. கோபதாபங்களைக் குறைத்துக்கொள்வது நன்று. சனி பகவானின் சஞ்சாரமும் உங்களுக்கு நன்மைகளையே செய்யும். 06.09.2004 இல் சனீஸ்வரன் கடக ராசிக்கு வந்து, மார்கழிமாதம் மீண்டும் மிதுனராசிக்கு வருகிறார். உத்தியோகம், தொழில் முதலியவற்றில் நல்ல இலாபம் அடைவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவு கிடைக்கும். கருமங்களைத் திட்டமிட்டுச் செயற்படுவதும், எல்லோரையும் அனுசரித்துப் போவதும் நன்று. இராகு, கேது சஞ்சாரத்தால் உடல் நலக் குறைவு தோன்றலாம். வருடத்தில் முதல் மூன்று மாதத்தில் புதிய தொழில் தொடங்க, முன்னேற வசதிகள் கிட்டும். சிலருக்கு தல யாத்திரை செய்யும் வாய்ப்புண்டு.

### பெண்களுக்கு:

இந்த வருடத்தில் முதல் மூன்று மாதகாலம் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். நீண்ட கால ஆசைகள் பூர்த்தியாகும். உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள். விரும்பிய திருமணம் கைகூடும்.

### தொழிற்துறையினர் - வியாபாரிகள்:

உங்களுக்கு 2004 ஆம் ஆண்டு சிறப்பாக உள்ளது. பல வழிகளிலும் உதவிகள் கிடைக்கும். புதிய தொழில், புதிய வியாபாராம் எல்லாம் நல்லபடியாக நடக்கும். மின்சாரப் பொருட்கள் சம்பந்தமான வியாபாரிகள் கூடிய இலாபம் பெறுவர். பிற்பகுதியில் தொழில்களில் முன்னெச்சரிக்கையுடன் நடந்து, சிரமங்களைக் குறைத்துக்கொள்ளலாம்.

### உத்தியோகத்தர்களுக்கு:

வருடத்தின் முற்பகுதி உங்களுக்குப் பல சிறப்புக்களைத்தரும். உயரதிகாரிகளிடம் நல்ல பேரும், சிலருக்கு பதவி உயர்வும் கிடைக்கும். பிற்பகுதியில் பல வழிகளாலும் சிரமப்படவேண்டியிருக்கும். பெரியோர்களுடன் ஆலோசித்துச் செயற்படுவது நன்று. பலர் உங்களை ஏமாற்ற நினைப்பார்கள், அவதானம் தேவை.

### அரசில்வாதிகளுக்கு:

முதல் மூன்று மாதமும் உங்களுக்குப் பெயரும், புகழும் கிடைக்கும். மேலிடத்து ஆதரவும் இருக்கும். சிலருக்குப் பொறுப்பான பதவிகள் கிட்டும். பிற்பகுதியில் திடீரென மாற்றங்கள் ஏற்பட்டு, குழப்பமான நிலைக்குத்தள்ளும். பெயரைக்கெடுத்துக்கொள்ளாமல், பொறுமையுடன் இருந்தால் முன்னேறலாம்.

### மாணவர்களுக்கு:

வருட முற்பகுதியில் உங்கள் திறமையை வெளிப்படுத்தி முன்னேறலாம். மேற்படிப்புக்கள் கைகூடும். பிற்பகுதியில் உடல் நலக்குறைவு, பொருளாதாரக்கஷ்டம் போன்ற சூழ்நிலை இருக்கும். கல்வியில் கவனமாக இருந்து, முன்னேற வேண்டிய கட்டம்.



## இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

உடலுறுதியுடன், உழைப்பினால் முன்னேறும் இடபராசி அன்பர்களே!

உறுதியான உழைப்பும், செயற்திறனும் உங்களை முன்னேறவைக்கும். பல துறைகளிலும் திறமைசாலிகளாக இருந்தால் பலரும் உங்களைச் சூழ்ந்துகொண்டிருப்பார்கள். உங்கள் இராசிக்கு ஆயுள் ஸ்தானாதிபதியும், இலாபாதிபதியுமான குருபகவான், 28.08.2004 வரை நாலாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். தாயாருக்கு உடல் நலமும், சிறப்பும் உண்டு. அவர்களால் பல நன்மைகளும் உண்டாகும். 28.08.2004 இன்மேல் செய்தொழில் உயர்ச்சி உண்டு. உடல் நலம் சிறப்பாக இருக்கும். உத்தியோக நிலைகளிலும் நன்மை உண்டாகும். எனினும் சனீஸ்வரன் 2 ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குடும்பஸ்தானம் சிறப்பாக இராது. வருட ஆரம்பத்தில் ஏழரைச்சனி நடக்கிறது. 06.09.2004 இல் ஏழரைச்சனி நீங்கி, சனி 3 ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் இந்தக் காலத்தின்மேல் சனீஸ்வரனும் நற்பலன்களைத் தருவார். வாழ்க்கையைத் திட்டமிட்டுச் செயற்படுத்தினால் வெற்றி நிச்சயம். உங்கள் சாதனைகளால் முன்னேற்றம் அடைந்து, ஆற்றலை வெளிப்படுத்த வாய்ப்புண்டாகும். உயர்பதவி, பொதுமக்களால் நன்மைகள் ஏற்படும்.

வருடப்பிற்பகுதி சற்று கஷ்டமான பலன்களையே தரும். தேவையில்லாத விஷயங்களில் ஈடுபடாமல் இருப்பது நன்று. விவசாயப் பெருமக்கள் மழை வேண்டி, வருண பகவானைப் பிரார்த்திக்கவும். எல்லாக் கருமங்களிலும் முன்னெச்சரிக்கை தேவை. கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் தோன்றலாம். ஆரடமபரப் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் அதிக செலவுகள் ஏற்படும். வரவுக்கேற்ப செலவு செய்தால் எல்லாவற்றையும் வெல்லமுடியும்.

### பெண்களுக்கு:

உங்கள் கணவரின் வருவாய்க்கேற்ப நீங்கள் நடந்துகொள்ளவேண்டும். மனநிம்மதியையும், குடும்ப கௌரவத்தையும் குறைக்கக் கூடாது. 2004 ஆம் ஆண்டு ஆவணிவரை திருமணத்தடை தொடர்ந்திருக்கும். வெள்ளிக்கிழமை விரதம் நற்பலனைத் தரும். ஆவணியின்மேல் வாழ்க்கையில் நல்ல திருப்பங்களை எதிர்பார்க்கலாம்.

### வியாபாரிகள் - தொழிற்துறையினர்:

உங்களுக்கு தொழில் செய்வதற்காக பணம் தேவைப்படும். அதிகமாக வாங்கிக் கஷ்டப்படாதீர்கள். புதிய முதலீடுகளைத் தள்ளி வைத்தல் நன்று. 2004 ஆம் ஆண்டு ஆவணியின்மேல் பல முன்னேற்றங்கள் தென்படும். தொழில் விரிவாக்கம் செய்வதற்கு இந்தக் காலம் நன்று.

### உத்தியோகத்தர்களுக்கு:

2004 ஆம் ஆண்டு ஆவணிமாதம்வரை வேலைப்பளுவும், சிரமமும் அதிகமாக இருக்கும். எந்த நேரமும் விபரீதங்கள் நடக்கலாம். லஞ்சம், ஊழல் என்று உங்களை மாட்டி வைக்கப்பார்ப்பார்கள். அவதானம் தேவை. ஆவணி மாதத்தின் பின்பு உங்களுக்குத் தொழில் முன்னேற்றம் கிடைக்கும். உயரதிகாரிகளின் ஆதரவும், வசதியான இடமாற்றங்களும், கௌரவமும் கிடைக்கும்.

### அரசியல்வாதிகளுக்கு:

தைபிறந்தும் வழிபிறக்கவில்லையென்ற அனுபவம் தொடர்கிறது. உங்கள் திறமைக்கு மேலிடம் இன்னும் ஆதரவு தரவில்லை. சுறுசுறுப்பாக இருங்கள். கௌரவம் உண்டு. ஆவண மாதத்தின் மேல் உங்கள் கௌரவம் வலுக்கும். மக்களுக்குத் தொண்டாற்றி முன்னேற்றப் பாதையில் செல்லுங்கள். வெற்றி நிச்சயம்.

### மாணவர்களுக்கு:

வருட ஆரம்பத்தில் உங்கள் படிப்புக்கேற்ற மதிப்பெண் கிடைக்கவில்லையென்று கவலைப் படாதீர்கள். ஆசிரியர்கள் உங்கள் மீது நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கிறார்கள். ஆவணி மாதத்தின்மேல் பலவும் சிறப்பாக அமையும். விளையாட்டுத்துறையிலும் சிறப்பைத் பெறுவர்கள்.

(தொடரும்....)

## ஆய்வுக் கட்டுரை

*(நேற்றைய தொடர்ச்சி...)*

வெளிவரும் காபனரொட்சைட்டை உள்ளெடுத்து, ஒட்சிசனை வெளியிடுவதற்குப் போதுமான மரங்கள் இல்லாமையால், பச்சை இல்லம் பாதிக்கப்பட்டு, வளிமண்டத்தில் குறைந்துசெல்லும். அடுத்த கட்டமாகப் பெருமழையைத் தடுக்க வழியில்லாதபோது, மண் இழுத்துச் செல்லப்படும். அதன்பின் காற்றினால் மண் அரித்துச்செல்லப்படும். மாறாக - மரத்தை நாட்டுவோமானால், மழைநீர் வேகத்

காற்று மாசடைதலை மரங்கள் பெருமளவில் தடுக்கும் இயல்புடையன. இதுபற்றி விபரமாக - 'மரம் வளர்ப்போம்' பகுதியிலும், 'சூழல் பாதுகாப்பில் வேம்பின் பயன்' என்ற பகுதியிலும் பார்க்கலாம்.

# யாழ்ப்பாணக்குடாநாடு பாலைவனமாகுமா? சோலைவனமாகுமா?

காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிக்கின்றது.

மழைநீர் - காபனீரொட்சைட்டை மட்டுமல்ல, காற்றிலுள்ள எல்லாவகையான இரசாயனப் பொருட்களையும் உறிஞ் சும் தன்மையுடையது.. அமிலமழையும் இவ்வாறே ஏற்படுகிறது என்பதை ஏற்கனவே பார்த் தோம். அமிலமழை போன்று, காபனீரொட்சைட்டுக் கலந்த மழை உயிரினங்களில் பாதிப்பு ஏற்படுத்தாமல், சடப்பொருட்களில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. காற்றில் நஞ்சு வாயுக்கள் இருந்தால் - மழைநீர் அவற்றை உறுஞ்சும் ஆற்றல் உடையதால் - நாம் குடிக்கும் நீரில் நஞ்சுத்தன்மை கலந்திருக்கலாம். சுற்றாடல் பற்றி அக்கறை கொள்ளாமை யாலும், தகுந்த சூழல் பாதுகாப்பு முறைகளையும் மேற் கொள்ளாமையாலும் இயற்கை முறையில் நீர் மாசு அடைதலுக்கு நாம் மறைமுகமாக தொழிற்படுகிறோம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**மண் மாசடைதல்.**

பாலைவனம் உருவாகுவதில் முக்கிய சுற்றாடல் காரணி மண்ணாகும். மண் மாசடைதல் எனக் கொள்ளும்போது, குடாநாட்டில் பின்வரும் மாற்றங்களைக் குறிப்பிடலாம்.

- நன்மண் உவர் மண்ணாகிறது.
- மண் வளமற்ற மண்ணாகிறது.
- மண் காற்றாலும், மழையாலும் அரித்துச் செல்லப்படுகிறது.
- நன்னிலங்களை பாழடைந்த நிலங்களாக்குகிறது.

மரங்களை வெட்டும்போது, நிலங்கள் பொட்டல் வெளிகளாகின்றன. இங்கு மழை பெய்யும்போது - மழைநீர் நிலத்திலுள்ள பசளைகளையும், கனிப்பொருட்களையும் கழுவிச் செல்வதால், அந்த நிலத்தின் வளம் தைத்தடுத்து, நீரை நிலத்தினுள் செலுத்துவதனால், நில நீர் அளவு அதிகரிக்கும்.

நிலத்தின் மேல் தளைகள் ஒரு படையாக உருவாகி, மண்ணை வளமுள்ளதாக மாற்றுகிறது. மண் மாசடைதலை ஊக்குவிக்கும் காரணிகளில் - யுத்தமும் ஒரு முக்கிய காரணியாகக் கொள்ளலாம். மண்ணில் நன்மை செய்யும் பல நுண்ணுயிர் கள் இருக்கின்றன. இவை மண்ணை வளமுள்ளதாக ஆக்கும் திறனுடையவை. குறிப்பாக மண் புழுக்கள் மண்ணை வளப்படுத் துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. அதேபோன்று, காற்றிலுள்ள நைதரசன், மண்ணில் களை நாட்டும் பற்றீரியாக்களாகத் தொழிற்படுகின்றன. நிலத்துக்குப் பூச்சிநாசினிகள் இடும்போது இவை அழிந்துவிடும்.

**காற்று மாசடைதல்**

ஏற்கனவே நீர் மாசடைதலில் பார்த்தவாறு - பின்வரும் முறைகளில் குடாநாட்டில் காற்று மாசடைகிறது.

- காற்றில் ஒட்சிசன் சதவீதம் குறைந்து, காபனீரொட்சைட்டின் வீதம் அதிகரித்துக் காணப்படல்.
- காற்று, தூசிகளைக் கொண்டிருத்தல்.
- காற்று நோய்க்கிருமிகளைக் கொண்டிருத்தல்.

மேற்குறிப்பிட்டவை காணப்படின் - மொத்தத்தில் காற்று மாசடைந்ததாகவே கருதப்படும். இப்படியான மாசுள்ள காற்று, குடாநாட்டில் பல நோய்கள் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது. மாசடைந்த காற்று விரைவாக நீரையும், நிலத்தையும் மாசடையச் செய்துவிடும் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

**கடல் மாசடைதல்**

குடாநாட்டின் நிலவளத்துக்கும், சீரான காலநிலைக்கும், பொருளாதார வளத்துக்கும் கடல்வளம் அவசியமாகும். குடாநாட்டு நிலவளத்தை தனித்துப்பார்க்கமுடியாது. கடல் வளத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டிய சூழலியலில் - கடலும் நிலமும் அமைந்துள்ளன. எனவே, கடல்வளம் மாசுறுவதும், நிலவளத்தைப் பாதிக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். பின்வரும் செயல்முறைகளால் குடாநாட்டு கடல் மாசடைகிறது.

- இயந்திரப் படகுகளில் எரிபொருள் கசிந்து கடல் நீருடன் கலத்தல்
- கடற்படையின் குண்டுத்தாக்குதல்
- முருகைக்கல் அகற்றுதல்
- மண் அள்ளுதல்
- மலங் கழித்தல்
- கழிவுப் பொருட்களைக் கொட்டுதல்

கடல் நீரில் எரிபொருள் கலக்கும்போது முருகைக்கல் பாதிக்கப்படுவதுடன், சிறிய உயிரினங்களும் அழிந்துவிடும். முருகைக் கல் அகற்றுதல், மண் அள்ளுதல் போன்ற நடவடிக்கைகளால் கடலரிப்பு ஏற்படுகிறது. மலங்கழிப்பதாலும், கழிவுப்பொருட்களை கொட்டுவதாலும் கடல் உணவு மாசடைகிறது.

(தொடரும்...)

மு.கந்தசாமி (மேலாளர்)
அக்றோடெக் தகவல் மையம்.
கரவெட்டி.

## பார்வைகள்... பதிவுகள்... பகிர்வுகள்...

## பழங்குடிகளாக மாறும் ஈழத்தமிழர்கள்...

அவுஸ்திரேலியப் பழங்குடிகளாக மாறும் ஈழத்தமிழர்கள் விடயம் அதிர்ச்சியளிக்கக் கூடியது. அவுஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்து சென்ற ஈழத்தமிழர்கள், அங்கு பழங்குடிகளாக மாறிவருகின்றனர். பழங்குடிகளைத் திருமணம் செய்து, அதன் மூலம் அவர்கள் பழங்குடிகளாக மாறிவருகிறார்கள் எனக்கருதவேண்டாம்.

அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து, சட்டவிரோதமாகச் சென்ற ஈழத்தமிழர்கள் திருப்பியனுப்பப்படவேண்டிய சம்பவங்கள் உள்ளன. மிகவும் கஷ்ரப்பட்டு, ஆழ்கடலில் படகுகள்மூலம் ஆபத்தான பயணம் மேற்கொண்டு, அவுஸ்திரேலியாவை சென்ற டையும் ஈழத்தமிழர்கள் - தாம் திருப்பியனுப்பப்படுவதைத் தவிர்க்க, அங்குள்ள பழங்குடிகளை நாடுகின்றனர்.

அவுஸ்திரேலிய பூர்வீகவாசிகளாக உள்ளவர்கள் பழங்குடிகள். அவர்கள் பிரிட்டிஷின் படையெடுப்பால் ஒடுக்கப்பட்டவர்கள். இது வெள்ளையர்களின் குடியேற்ற நாடாக - பிரிட்டிஷ் முடியாட்சிக்குள் இருக்கின்றது. இங்கு பழங்குடிகள் ஒடுக்கப்பட்டே உள்ளனர். பழங்குடி[illegible]ளின் எழுச்சி காரணமாக அவுஸ்திரேலி[illegible] வெள்ளையின அரசு, அவர்களுக்குப் பல சலகைகளை வழங்கியுள்ளது.

இந்தப் பழங்குடிகள் யாரென இனக் கூற்றியலில் பார்த்தால் - அவர்கள் மானிடர்களின் மூதாதையர்கள் என்பதை அறியலாம். திராவிடர்களின் மூதாதைகளும் அவுஸ்திரேலியப் பழங்குடிகளும் அவுஸ்ரலொயிட் என்ற இனக்குழுமத்தை சேர்ந்தவர்கள். தொல் - மானுடவியல் ஆய்வில் இந்த அவுஸ்திரேலியப் பழங்குடிகள் - இந்தியா, இலங்கை நிலப்பரப்புக்களில் இருந்து 60 ஆயிரம் ஆண்டுகளின் முன் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து சென்றவர்கள் என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

அவுஸ்திரேலியப் பழங்குடிகள் இன்றும் ஈழத்தமிழர்களின் முகத்தோற்றம் , உடற் கட்டமைப்புடன் ஒத்தவர்களாக இரு[illegible]கின்றனர். திடீரெனப் பார்த்தால் பா[illegible]பரிய ஈழத்தமிழர்களையும் அவுஸ்திரேலியப் பழங்குடிகளையும் வேறுபடுத்தி அறிய முடியாது. இன்றும் ஈழத்தமிழர்களின் மூத்த தலைமுறையிடமுள்ள பல பழைய பழக்கவழங்கங்களும் அவுஸ்திரேலியப் பழங்குடிகளிடம் இருக்கின்றன.

அத்துடன், அவுஸ்திரேலியப் பழங்குடிகளிடம் முத்தம்மா, கறுப்பையா என்ற பெயர்களின் மருஉ பெயர்களாக திரிந்து பழக்கத்தில் உள்ளதை அவுஸ்திரேலியப் பழங்குடிகளுடன் பழகிய எமது ஈழத் தமிழர்கள் கூறுகின்றனர்.

இங்கு அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாகப் புலம்பெயர்ந்து செல்கின்ற ஈழத்தமிழர்களில் பலர் - பழங்குடிகளின் முகச்சாயலைப் பயன்படுத்தி தம்மைப் பழங்குடிகளின் பிரசைகளாகவே பகிடி செய்து, அவர்களுக்குரிய சலுகைகளையும் பெறுகின்றனர். இவர்களில் சிலர் முக்கிய பிரமுகர்களாக மாறியிருக்கின்றனர். இதுதான் ஈழத்தமிழர்கள் அவுஸ்திரேலியப் பழங்குடிகளாக மாறுகின்ற கதை.

இன்று அவுஸ்ரேலியாவுக்கு ஒலிம்பிக் சார்பில் தங்கப் பதக்கம் எடுத்துக் கொடுக்கும் மனிதர்களாக பழங்குடிகளே உள்ளனர். அமெரிக்காவுக்கு விளையாட்டுத்துறையில் நீக்குரோக்கள் பெயரெடுத்துக் கொடுப்பதுபோல் அவுஸ்திரேலியாவுக்குப் பழங்குடிகள்.

அவுஸ்திரேலியப் பழங்குடிகளாக நம்மவர்கள் மாறுகின்ற மர்மம் ஒருபுறமிருக்க- அவுஸ்திரேலியப் பழங்குடிகள் பற்றி இனனும் விரிவாக பிறிதொரு தடவையில் பார்ப்போம்.

திரு.த.திரு

# வடகொரியா அணு ஆயுதங்கள் தொடர்பாக விரைவில் தீர்மானத்தை எடுக்கவேண்டும்

## அமெரிக்க அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை



வடகொரியாவில் ஜொங் பொயோங் நகரில் அமைந்துள்ள அணுசக்தி உலையைப் பார்வையிடச்சென்ற அமெரிக்க அரசசார்ப்பு அதிகாரிகளிடம் - விரைவில் அணு ஆயுதங்கள் தொடர்பான தீர்மானமொன்றை எடுக்கவேண்டும் எனவும், தவறினால் தாம் அணு ஆயுதங்களை உற்பத்திசெய்ய முயற்சிசெய்யப் போவதாகவும் வடகொரியா தெரிவித்துள்ளது.

இதனால் அணு ஆயுதத் தயாரிப்பின் அடிப்படைப் பொருளான சுத்திகரிக்கப்பட்ட அணுசக்தி மூலப் பொருட்கள் இருப்பதனை சோதனைசெய்ய இயலாது போய்விட்டதாகப் பார்வையிடச் சென்றவர்களில் ஒருவரான சார்ல்ஸ் பிறிற்சாட் தெரிவித்தார்.



அணு ஆயுதத் திட்டத்தைப் பார்வையிடச் சென்றவர்கள் - அரசசார்பற்ற அதிகாரிகள் எனக் குறிப்பிடப்பட்டபோதிலும்- அமெரிக்க அரசிற்கும் அவர்களுக்கும் தொடர்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடகொரியா அணு ஆயுதங்களை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்வது மாத்திரமின்றி, அது தொடர்பான தொழில்நுட்பத்தினை மற்றைய நாடுகளுக்கு வழங்குவதைத தடைசெய்வதற்கு அமெரிக்கா தொடர்ச்சியாக முயற்சிசெய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷில் நடந்த தாக்குதலில் செய்தியாளர் கொல்லப்பட்டார்!



பங்களாதேஷின் தென்மேற்கு நகரான குல்நா என்ற இடத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் - மனிக்ஷா என்ற 45 வயதுடைய புகழ்பெற்ற செய்தியாளர் கொல்லப்பட்டார். இவர் - 'நியு ஏஜ்' என்ற பத்திரிகையின் செய்தியாளரும், குல்நா நகரின் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.

மேலும், பி.பி.ஸி இன் வங்காள சேவைக்குப் பொறுப்பாகவும், சூழலியல் தொடர்பான ஆர்வலராகவும் கடமை புரிந்துள்ளார்.

பங்களாதேஷில் பத்திரிகையாளர்களுக்கெதிராகத் தாக்குதல்கள் அண்மைக்காலங்களாக அதிகரித்துவருகின்றது.

மேலும், முச்சக்கரவண்டி ஒன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந த வேளையில் இந்தக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. பங்களாதேஷ் பிரதமர் காலிதா ஷியா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஷேக் ஹசீனா ஆகியோர் இந்தக்கொலையை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள்.

இந்தப் பிரதேசத்தில் கடந்த 3 வருடத்துள் கொல்லப்பட்ட நான்காவது பத்திரிகையாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆபிரிக்காவுக்கு மலேரியாவைக் கட்டுப்படுத்த

# அனுப்பும் மருந்துகள் வீரியம் குறைந்தவை!



ஆபிரிக்க நாடுகளுக்கு மலேரியாவைக் கட்டுப்படுத்துவதற்கு அனுப்பப்படும் மருந்துகள் எதிர்ப்புத்திறன் குறைந்தனவாக அமைந்துள்ளதாக 'லான்செற்' எனப்படும் புகழ்பெற்ற சஞ்சிகைக்கு மலேரியா தொடர்பான நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மலேரியாவிற்கெதிராக போரிடுவதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட மருந்துவகைகள் செயல்திறன் குறைந்தனவாக அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியுடன், சர்வதேச அளவில் திரட்டப்படும் நிதி, தவறான முறையில் பாவிக்கப்படுவதாகவும் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். மரணமடைபவர்களின் எண்ணிக்கை அரைப்பங்காக 2010 ல் குறைப்பதற்கு திட்டம் ஒன்றை ஆரம்பித்திருந்தது. 'குளோரோகுயின்' 'சல்புடொக்சைன்' 'பைரிகுமதனமைன்' ஆகிய நீண்டகால மலேரியாவிற்கான தடுப்பு மருந்துகள் தற்போது செயலிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காசநோய், மலேரியா ஆகிய நோய்களினை தடுப்பதற்கான சர்வதேச உதவி நிதியம் 2002 ஆம் ஆண்டு தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளினால் உருவாக்கப்பட்டிருந்தது.

# இஸ்ரேல் அமைத்த தடுப்புச்சுவர்: உச்சநீதிமன்றத்தில் ஆராயப்படும்!

(டெல்அவிவ்)

மேற்குக் கரைப்பகுதியில் இஸ்ரேல் அரசினால் அமைக்கப்பட்டுள்ள தடுப்புச்சுவர் சட்டரீதியானதா, என ஆராய்வதற்கு இஸ்ரேல் உயர்நீதிமனறம் தீர்மானித்துள்ளது. இந்த முடிவை ஒரு மாதத்திற்குள் நீதிமன்றம் அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெப்ரவரி 23 ஆம் திகதி சர்வதேச நீதிமன்றத்தில் - இஸ்ரேலினால் அமைக்கப்பட்டுள்ள தடுப்புச் சுவர் தொடர்பான முறைப்பாட்டை ஆராய்வதற்கு தீர்மானித்துள்ளது.



குறிப்பாக, இந்த தடுப்புச் சுவரை அகற்றுவதற்கான சாத்தியங்களை ஆராயுமாறு ஐக்கிய நாடுகள் சபை நீதிமன்றத்தைக் கோரியுள்ளது. பாதுகாப்புக் காரணமாக 700 கிலோ மீற்றர் நீளமான தடுப்புச்சுவரை தாம் அமைத்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. ஆனால், தமது எல்லைப் பிரதேசத்தை வரையறை செய்து கொள்வதற்காகவே இந்த தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டுள்ளதாக விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, சர்வதேச நீதிமன்றம் இந்தப் பிரச்சினையில் ஈடுபாடு கொண்டிருப்பது இஸ்ரேலைக் குழப்பத்திற்குட்படுத்தியுள்ளதாக வெளிநாட்டமைச்சர் சில்வன் சலோன் தெரிவித்தார்.

மேலும், இந்தப் பிரச்சினை சர்வதேச நீதிமன்றத்தில் விவாதிக்கத்தேவையில்லை எனவும், பலஸ்தீனத்துடன் இணைந்து சமரசமான



முறையில் தீர்த்திருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

இந்தத் தடுப்புச்சுவர் - அதை அண்டியபகுதிகளில் வாழும் மக்களிடையே மிகுந்த செல்வாக்கைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தும், இந்தத் தடுப்புச்சுவர் செல்லும் பாதையின் சில இடங்களில் பலஸ்தீனியர்களின் பிரதேசத்தினுள் ஆழமாக ஊடுருவிச் செல்வதால் அந்தப் பிரதேசங்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்குத தயாராக இருப்பதாக இஸ்ரேலின் நிதியமைச்சர் ரொமி லப்பிட் தெரிவித்தார். தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கலுக்கு ஈடாகவே இவற்றை சர்வதேச நீதிமன்றம் கருதுவதாக பி.பி.சியின் செய்தியாளர் தெரிவித்தார்.

உலக நோக்கு

## பாகிஸ்தானின் கராச்சி நகரில்

# கிறிஸ்தவத் தேவாலயம் முன் கார்க்குண்டுத் தாக்குதல்!

(கராச்சி)

பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாக தீவிரவாதிகளின் அட்டூழியம் அதிகரித்துவருகிறது.

தீவிரவாதிகளுக்கு எதிராக அதிபர் முஷாரப் தேடுதல் வேட்டையை தீவிரப்படுத்தியிருப்பது இவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு முஷாரப் ஆதரவு கொடுப்பதும், தீவிரவாதிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்தமாதம் முஷாரப்பைக்கொல்ல அவர்மீது 2 தற்கொலைப் படையினர் கார்க்குண்டுத் தாக்குதலை நடத்தினார்கள். இதில் 12 பேர் பலியானார்கள். முஷாரப் அதிர்ஷ்டவசமாகத் தப்பிவிட்டார்.

பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் கராச்சி நகரில் மீண்டும் கார்க்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. அங்குள்ள கிறிஸ்தவத் தேவாலயம் முன் வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட ஒரு கார் திடீரென வெடித்தது.

கார்க்குண்டு வெடித்ததில் அந்த சேவைமையம், கிறிஸ்தவ கோவில் இடிந்து விழுந்தது. அத்துடன் அந்தக் கட்டடம் தீப்பிடித்துக்கொண்டது. கோவிலின் முன் நிறுத்தப்பட்டிருந்த கார்களும் தீப்பிடித்துக் கொண்டன.



இந்தக் கார்க்குண்டுத் தாக்குதலில் கோவில் அருகே நின்றுகொண்டிருந்த பொலிஸார் உட்பட 12 பேர் காயமடைந்தனர். பாகிஸ்தானின் ஜெஷ்இ முகமது, லஸ்கர் இதொய்பா உட்பட பல்வேறு இயக்கங்கள் கூட்டுச் சேர்ந்து தனி இயக்கம் ஒன்றைத் தொடங்கி உள்ளனர். நாட்டின் பல்வேறு நகரங்களில் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தவும் இவர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

# ஈராக் மக்களிடம் அதிகாரத்தை கையளிக்க அமெரிக்கா தயாரா?

## கேள்வியெழுப்புகிறார் ஈராக்கிய மதத்தலைவர்





(பக்தாத்)

ஈராக்கின் முக்கிய மதத்தலைவர் அல் இஸ்லாம் அலி அப்துல் ககிம் அல்சயி ஈராக்கிற்கான ஆட்சியதிகாரத்தை ஈராக்கிய மக்களிடம் கையளிப்பதில் அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகள் உண்மையான விசுவாசத்துடன் செயற்படுகின்றவா என்ற கேள்வியை தனது கடிதத்தின்மூலம், இரு தலைவர்களையும் கேட்டுள்ளார்.

இதனிடையே, இவரது கடிதத்தை ஆதரித்து சியா முஸ்லிம்களின் நகரான பஷ்ணாவில் ஆயிரக் கணக்கான ஈராக்கியர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் ஈராக்கின் தற்போதைய நெருக்கடிகள் தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு, ஈராக்கிற்கான அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இதனிடையே ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் தேர்தல்கள் நேரடியாக ஈராக்கிய நலன்களுக்காகவே நடத்தப்படவேண்டும் எனவும், இந்தத் தேர்தல்களில் அமெரிக்க நலன்கள் இருக்கமாட்டாதெனவும் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாக அதிகாரியான போல் பிரைமர் நாளை மறுதினம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானுடன் இந்தத் தேர்தல்களில் ஐக்கிய நாடுகளின் பங்களிப்பைப் பெறுவதற்கான பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.

இதனிடையே, பி.பி.ஸி.இன் குமீதா லுதனா கருத்துத் தெரிவிக்கும்போது - தேவை ஏற்பட்டால் தாம் ஒன்றுதிரண்டு அமெரிக்காவிற்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்க தயாராக உள்ளார்கள் என்பதை இந்த ஆர்ப்பாட்டத்தின்மூலம் ஈராக்கிய மக்கள் தெளிவுபடுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

# ஜோர்ஜிய பாதுகாப்பு அமைச்சரின் விமானம் மீது ஈராக்கில் தாக்குதல்



(பக்தாத்)

ஈராக்கிற்குச் சென்றுவிட்டுத் திரும்பியவேளை, பக்தாத்தில் வைத்து ஜோர்ஜிய பாதுகாப்பமைச்சர் பயணம் செய்த விமானம் மீது சதாம் ஆதரவுப் படைகள் நடத்திய தாக்குதலில் அவர் மயிரிழையில் உயிர்தப்பினார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஜோர்ஜிய தலைநகர் ரிபிலிசிக்கு திரும்பிய அமைச்சர் டேவிட் ரெவ்சாடே பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில் - தாக்குதல் நடந்த சமயம் நான் விமானத்தில் நித்திரையில் இருந்தேன். தாக்குதல் நடந்த பிறகே எனக்கு அது தெரிவிக்கப்பட்டது எனவும் தெரிவித்தார். கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஜோர்ஜிய அரசாங்கம் ஈராக்கில் அமெரிக்க படைகளுடன் இணைந்து பணியாற்ற ஒரு தொகுதி ஜோர்ஜிய படைகளை அனுப்பியிருந்தது. இதில் எழுபது வைத்தியரும், கண்ணிவெடி அகற்றுபவர்களுமாவார்.

இவர்களைப் பார்வையிடவே ஜோர்ஜிய பாதுகாப்பு அமைச்சர் சென்றிருந்தார்.

இதேவேளை, ஜோர்ஜிய அரசால் அனுப்பட்ட படைகளில் 200 பேர் அடுத்த மாதம் மீளத்திரும்பியழைக்கப்படுவதுடன் 300 படையினர் புதிதாக ஈராக்கிற்கு அனுப்பப்பட்டனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# காணாமற்போனோரின் நிலை: ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுநடத்தி தீர்க்கமான முடிவை பெற்றுத்தருவேன்

## யாழ். இராணுவத் தளபதி கூறுகின்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாக, ஜனாதிபதியுடன் பேசி, தீர்க்கமான முடிவொன்றினைப் பெற்றுத் தருவேன் என, காணாமற்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினருக்கு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால உறுதியளித்தார்.

காணாமற்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளை சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்து யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சுசில் சந்திரபால நேற்று சந்தித்தபோதே, இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

1996 ஆம் 1997 ஆம் ஆண்டுகளில் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக, எனக்கு விரிவாக எதுவும் தெரியாது. இங்கு பல பொதுமக்கள் காணாமற்போனார்கள் என்பது பொய்யானதல்ல.

காணாமற்போனோர் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்து அதற்குப் படையினர் யாராவது அச்சுறுத்தலாக இருந்தால் உடன் என்னுடன் தொடர்புகொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளைத் தேடுவதற்கும், அவர்கள்பற்றி அறிவதற்கும் படையினர் தடையாக இருக்கமாட்டார்கள்.

ஏழு வருடங்களாக காணாமற்போனோர் தொடர்பாக ஒரு சில வாரங்களுக்குள் கண்டுபிடிப்பது கடினமானவிடயம். கைதடியில் காணாமற்போன 24 பேர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க படையினர் பூரண ஆதரவு வழங்குவர். காணாமற்போனோரில் 8 பேர் தொடர்பான தகவல் தமக்குக் கிடைத்திருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்னிடம் கூறியுள்ளது எனக் கூறினார்.

இந்தச் சந்திப்பில் 50 இற்கு மேற்பட்ட காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



## நாற்சந்தி

'இந்த ஆண்டு நான் பெரிதாகச் சிரித்தது நேற்றுத்தான்'

'ஏன் நேற்றைக்கு ஏதாவது சந்தோசமான ஏதாவது நடந்துதா மணியம்...' அந்தளவு பெரிதாகச் சிரிப்பதற்கு...'

'சந்தோஷமாகச் சிரித்து இரண்டு வருடங்களுக்கு மேலாகியிட்டு கனகு... அது ஆனையிறவு வீழ்ந்த அன்றைக்கு நடந்தது. இது வேறு விதமான சிரிப்பு...'

'ஏதாவது திறமான நகைச்சுவைத்துணுக்கை படிச்சனியோ!'

'இல்லை... ஒரு செய்தியை வாசிச்சேன் சிரிப்பு வந்திட்டுது...'

'என்னடாப்பா அப்படிச் சிரிப்பாய் சிரிக்கவைச்ச செய்தி...?'

'நியாயமானதும், உறுதியானதுமான அரசியல் பணிகள் புரிவதற்கு அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டும் என்று ஜனாதிபதி விடுத்திருந்த அறிக்கையைப் படித்தேன்...' சிரிப்பு வந்திட்டுது...'

'முதலில் நியாயம் என்றால் என்ன என்பதற்கு அர்த்தம் தெரிந்த அரசியல்வாதிகள் எவராவது சிறிலங்காவின் பௌத்த சிங்கள அரசியல்கட்சிகளில் இருக்கின்றார்களா என்பது சந்தேகமாக இருக்கையில் ஜனாதிபதியின் இந்த அழைப்பு யாரை நோக்கியது என்பதுதான் கேள்வியாக உள்ளது...'

'ஒருத்தருமே இப்பணி புரிய வரமாட்டார்கள்... வந்தாலும் அவர்கள் நியாயமானவர்களாக உறுதியானவர்களாக இருக்கமாட்டார்கள். என்பதில் அவருக்கு நம்பிக்கை அதிகம்... அதனால்தான் இந்த அழைப்பை அவர் விடுத்திருக்கிறார் போலும்...'

'சரியாய் சொன்னாய்... அப்படி ஏதாவது நியாயமானவர்களாகவும், உறுதியானவர்களாகவும் முன்வர நேர்ந்தால், நியாயமானதும், உறுதியானதுமான தீர்வுகளை பிரச்சினைகளுக்குகாண வேண்டியதாகிவிடும்... அப்படியொரு நிலை ஏற்பட்டால் அவர்களால அரசியல் நடவடிக்கை எதையும் தொடர்ந்து செய்யமுடியாதே'

'அப்ப நியாயமான அரசியல்வாதிகள் சிறிலங்காவில் இல்லைஎன்று கூறுகிறார் அப்படித்தானே...'

தெருவிளக்கு

# மூன்று அமைச்சுகள் பறிக்கப்பட்டதால் புலிகளுடன் பேசும் முயற்சி தோல்வி!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

புலிகளுடன் எதிர்வரும் மூன்று மாதத்திற்குள் பேச்சுக்கள் நடத்த அரசாங்கம் எடுத்த முயற்சிகள் - மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் பயனற்றுப் போனதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று லக்கலவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே, பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

முக்கிய அமைச்சுக்கள் அற்ற நிலையில் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது பயனற்ற விடயம் என்று, விடுதலைப் புலிகள் சுட்டிகாட்டியுள்ளனர்.

நவம்பர் மாதம் நான்காம் திகதி அரசாங்கத்தைக் கைப்பற்றும் நோக்குடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 14 பேர் எமது கட்சியிலிருந்து விலகிவிடுவார்கள் என எதிர்பார்த்து, மூன்று அமைச்சுக்கள் ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்டன.

அந்த அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்னர், சமாதான முயற்சிகள் ஸதம்பிதமடைந்தன. காரணம், மூன்று அமைச்சுக்களும் பேச்சுவார்த்தையுடன் தொடர்புடைய அமைச்சுக்கள் என்பதாகும். சமாதானத்திற்கு எதிர்காலம் உண்டா என்ற கேள்வி இதனால் உருவானது.

இந்தப் பிரச்சினை எமது பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இரண்டாயிரத்து 500 கோடி பெறுமதியான முதலீடுகளைச் செயற்படுத்த முதலீட்டாளர்கள் மறுத்து வருகின்றனர்.

நாம் தற்போது சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றோம். 2004 ஆம் ஆண்டு எமது அரசாங்கத்திற்குத் தரப்படவுள்ள 2000 கோடி ரூபா நிதியைப் பெறவே, இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறுகின்றது.

எனவே நாம் சமாதானத்தினைப் பாதுகாக்க மக்கள் என்ற முறையில் இணைந்து செயற்படவேண்டும் என்றார்.

### போராளி வீரச்சாவு

நேற்று வெள்ளிக்கிழமை சுகவீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை சாரங்கன் என்று அழைக்கப்படும் செந்தில்வேலன் பல்பொருள் வாணிபம், 156 ஆம் கட்டை, ஆனந்தபுரம், யாழ்சாலை கிளிநொச்சியைச் சேர்ந்த இராசேந்திரன் இராமேஸ்வரன் என்ற போராளியே சாவடைந்தவராவர்.

### கண்காணி...

ரெலவ்சன், விடுதலைப் புலிகளின் ஆதரவாளராகச் செயற்படுகின்றார் எனக் கூறி, அவரை மீள அழைக்குமாறு நோர்வே அரசை ஜனாதிபதி சந்திரிகா கேட்டிருந்தார்.

இதன்படி கடந்த ஒக்ரோபர் மாதம் நோர்வே அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்காக நாடு திரும்பிய ரெலவ்சன், மீளத் திரும்பாத நிலையிலேயே புறூவ் ஹொவ்டே கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெனரல் புறூவ் ஹொவ்டே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முதலாவது தலைவராக 2002 ஆம் ஆண்டு நோர்வேயால் நியமிக்கப்பட்டு 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை பதவிவகித்ததும் குறிப்பிடத்தக்கது.

## வலயக்கல்வி அலுவலகம்...

பதற்கு இந்தப் பகுதி மக்கள் பலதடவை தென்மராட்சி கல்விவலய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் பயனேதும் ஏற்படவில்லை.

இதேவேளை, இந்தப் பகுதிகளில் சுமார் 300 குடும்பங்கள் வாழ்கின்றனர். இங்கிருந்து மாணவர்கள் கல்வி கற்க கொடிகாமத்திற்கே சென்று வந்தனர்.

இதனையடுத்தே இந்தப் பகுதி மக்கள் நேற்றுக்காலை பத்துமணியளவில் தென்மராட்சி கல்வி வலயதமதை சுற்று வளைத்து கல்வி அதிகாரிகள் அனைவரையும் அலுவலகத்துள் வைத்து வாயிற் கதவைப்பூட்டி மறியற்போராட்டத்தை நடத்தினர்.

மறியற்போராட்டம் நடந்துகொண்டிருந்தவேளை, பகல் 12 மணியளவில் அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், தென்மராட்சி கோட்டப்பொறுப்பாளர் கலைவாணன் ஆகியோர் தென்மராட்சி கோட்டவலய கல்விப்பணிப்பாளருடனும், மறியற்போராட்ட மக்களுடனும் சமரசப் பேச்சுக்களை நடத்தினர். இதன்படி எதிர்வரும் 21 ஆம்திகதி ஆண்டு ஒன்றுக்கான வகுப்பினை முதற்கட்டமாக ஆரம்பிப்பதெனவும் பின்னர் மிகுதி வகுப்புக்களை படிப்படியாக தொடங்குவததெனவும் தீர்மானிக்கப்பட்டதையடுத்து மறியற்போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. (29)

## உணர்வுபூர்வமாக நடைபெற்ற...

யம் சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். வீதியின் இருமருங்கிலும் போராளிகள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் அணி வகுத்து நின்றனர்.

பத்து மாவீரர்களின் திருவுருவப் படங் களை பாடசாலை மாணவிகள் தாங்கி வந்து நினைவுக்கல் உள்ள இடத்தில் வைத்தனர். பின்னர் பொதுசுடரினை வடமராட்சி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா, யாழ். மாவட்ட தேசியப்பேரவை செயலாளர் சொலமன் சிறில், அரசியற்துறைப் போராளி தீவகன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார். மாவீரர்களின் உருவப்படங்களுக்கு அவர்களது பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் ஆகியோர் ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர்.

புனரமைக்கப்பட்ட நினைவுக் கல்லை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் பகலவன் திரை நீக்கம் செய்துவைத்தார். நினைவுக் கல்லுக்கு பிரதேச கடற்புலிகள் பொறுப்பாளர் அன்பழகன் மலர்மாலை அணிவித்தார்.

நினைவுதின நிகழ்வில் கூடியிருந்த பொதுமக்கள் மாவீரர்களுக்கு அகவணக்கம் செலுத்தியதோடு, மலரஞ்சலியும் செலுத்தினர். இந் நிகழ்வுகளைத் தொடர்ந்து விசேடமாக அமைக்கப்பட்ட அரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

வடமராட்சி பிரதேச கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், வடமராட்சி கடற்தொழிலாளர் சங்க சமாசத் தலைவர் எஸ்.சூரியகுமார் உட்பட பலர் உரையாற்றினர்.

நினைவுதின நிகழ்வில் இறுதியாக கலைபண்பாட்டுக்கழக மகளிர் பிரிவினரின் இசைநிகழ்வுகள் இடம்பெற்றன. இதேவேளை மட்டக்களப்பு அரசடித்தீவு கேணல் கிட்டு நினைவுத் தூபிக்கு அருகாமையில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கிரிசன் தலைமையிலும் அம்பாறையில் காரதீவு பொது விளையாட்டு மைதானத்தில் அம்பாறை மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் பாவா தலைமையிலும், வவுனியாவில் பாவற்குளம், பூவரசம்குளம், செட்டிக்குளம், கோவில் குளம் ஆகிய பகுதிகளிலும் -

மன்னாரில் வட்டக்கண்டல் பிரதேசத்திலும் நடைபெற்றன.

இதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், மக்கள், மாணவர்கள், எனப்பெரும்பாலானோர் கலந்து கொண்டனர்.

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

| சீட்டிழுப்பு இல: | 1582 | திகதி: | 16.01.2004 | | | |
|---|---|---|---|---|---|---|
| வெற்றி இலக்கங்கள் | | | | | | |
| E | 3 | 8 | 6 | 7 | 3 | 4 |

### 12 வருடங்கள்...

வெளியானவுடன் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

எனினும் சட்டரீதியான பதவிக் காலமான 6 வருடங்கள் முடிந்தவுடனேயே மீண்டும் பதவிப் பிரமாணம் செய்துகொள்ள முடியும் என சட்ட நிபுணர்கள் சிலர் தெரிவித்தனர்.

இதன்படி ஜனாதிபதி இரண்டாவது தடவையாக செய்து கொண்ட பதவிப்பிரமாணம் சட்ட ரீதியானது என சட்டநிபுணர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பதவிப்பிரமாணம் அரசியல் யாப்புக்கு முரணானது என்றால் அது குறித்த தீர்ப் பினை உயர்நீதிமன்றத்தால் மாத்திரம் வழங்க முடியும் என்றும் ஜனாதிபதி செயலக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டது.

### ஜப்பானியத் தூதுவர்...

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடனும் அகாஷி பேச்சு நடாத்துவார்.

அத்துடன் இவர் கொழும்பில் தங்கியிருக்கும்போது ரோக்கியோ உதவி மாநாட்டின் இரண்டாவது தொடர் கூட்டத்தையும் நடாத்தி இலங்கையின் மீள் கட்டுமானம், அபிவிருத்தி குறித்து ஆயவுள்ளார். இந்த மாநாடு எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறும்.

கொழும்பில் யசூஷி அகாஷி நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் அடுத்த ஞாயிற்றுக் கிழமை வரை தங்கியிருப்பார் என்றும் ஜப்பானியத் தூதரக அறிக்கையில் கூறப் பட்டிருக்கிறது.

## இந்திய இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம்...

னத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பேச்சுக்களில் இருதரப்பிலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறிஸ்ஹேரத் தலைமையிலான மூவர் அடங்கிய குழுவும், இந்திய பாதுகாப்ப அமைச்சின் செயலாளர் அஜய் பிரசாத் தலைமையிலான குழுவும் பங்குபற்றியது.

இருபகுதியினருக்குமான உயர்மட்ட பேச்சுவார்த்தைகளில் படைகளுக்கான பயிற்சி, ஆயுததளபாட விற்பனை, மற்றும் இருநாடுகளுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்தல் தொடர்பாகவும் நடத்தப்பட்டதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளரான அமிர்தவா சக்கரவர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை அதிகாரிகள் இந்தியாவிடமிருந்து ஹெலிகொப்டர்கள் சிறிய ரக போக்குவரத்து விமானங்கள் கடற்படைக்கான கடற்கலங்கள என்கபவற்றைக் கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தியப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடனான சந்திப்பின் பின்னர் இலங்கை அதிகாரிகள் பிராந்திய பாதுகாப்பு பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பாக இந்திய பாதுகாப்பு அமைச்சரான ஜோர்ஜ் பெர்ணாண்டஸ்சையும் சந்தித்தாக அவர் தெரிவித்தார்.

### எட்டு மாதக்...

குறித்த சுதாகரன் மணிக்கடை வியாபாரம் செய்பவர் எனவும், கடந்த 14 ஆம் திகதி வியாபாரம் முடித்து முப்பதாயிரம் ரூபா பணத்துடன் வீடு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தைப்பொங்கல் தினத்தன்று தங்கள் வீட்டிற்கு சுவர்ணவதி வருவதாகத் தெரிவித்திருந்த போதும் வராத காரணத்தால், அவரது சகோதரன், சகோதரி வீட்டுக்குச் சென்று பார்த்தபோது மூவரும் இறந்து கிடக்கக் காணப்பட்டனர். இதனை அடுத்து அவர் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததை அடுத்து அவவிடத்துக்கு சென்ற பொலிஸார் சடலங்களை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைத்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (34, 121)

Diploma In Computer Accounting
For University Students
System Analysis
Data Processing
Quick Book
Pay Roll in Excel
Start On 23/01/04
பதிவுகளுக்கு:
STP Your Parner In IT Solutions.
73. Palaly Road, Kantharmadam Jaffna T.P: 2222674

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.